# ★ குருநானக்கும் குமாரசாமியாரும் ! ★

# இந்து தர்மமும் முன்னாள் நீதிபதியும் !

## அதர்மத்தை அழிக்க ஆவலுறும் அமைச்சர் !

## அதனைக் காக்க 'அறிவுரை' அளிக்கும் அய்யர் !

"வேதகாலத்திலிருந்து இந்தியா புனிதத்தன்மையில் உயர்ந்த ஸ்தானம் வகித்து வருகிறது."

"ஜாதி, நிறம், கொள்கை வேற்றுமை பாராட்டாமல், சமுதாய நீதிக்கும் நேர்மைக்கும் பாடுபட்டவர் குருநானக். மனித சமூகத்திற்கே களங்கத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கும் ஜாதீய அமைப்பானது, மிகமிகத் தாழ்ந்த சமூக அநீதி என்று குருநானக் தீர்மானித்தார். அந்த அநீதியை, சொந்தத்தில் ஒழித்துக்காட்டி, தனது கோட்பாடுகளுக்குத் தாமே ஒரு எடுத்துக்காட்டாக இருந்துவந்தார்."

"குருத்துவாரத்தில் வைத்து பூஜை செய்யப்படும்வாள், ஏழைகளையும் காப்பதற்கான புனிதச் சின்னமாக இருக்கிறது நமது மதக் கோட்பாடுகள்படி நாம் நடக்காவிடில், நான் அந்த மதத்தைச் சேர்ந்தவன், இந்த மதத்தைச் சேர்ந்தவன் என கூறுவதில் ஒரு பிரயோஜனமும் இல்லை."

—பிரதமர் ராஜா—

"இந்த நாடு மதம் கலவாத அரசால் ஆளப்படுவதனாலும், நாம் மதத்தோடு எந்தவிதத் தொடர்பும் கொண்டிருக்கக் கூடாதென்பது, அதற்குப் பொருளாகாது. அதற்கு எதிராக, நேர்மையான மத உணர்ச்சி நமது செய்கைகளை ஊக்குவிக்கவேண்டும். இந்து தர்மம் இந்து கலாசாரம், ஒழுங்காகக் காப்பாற்றப்படவேண்டும். இதற்காக எடுத்துக்கொள்ளப்படும் எல்லாவித முயற்சிகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் நாம் ஆதரவு அளிக்கவேண்டும்."

—சந்திரசேகர அய்யர்—
(முன்னாள் நீதிபதி)

இந்தத் துணைக் கண்டத்தின் மீது ஏற்பட்ட படையெடுப்புகளோ அநேகம். பலப்பல உருவங்களிலே அந்தப்படையெடுப்புகள் ஏற்பட்டன. இந்த நாட்டின் இயற்கைவளம், இங்கிருந்த மக்களின் இயலாத்தனமை இங்கு மற்றவர்கள் படையெடுத்து வருவதற்கான, நல்ல வாய்ப்பினைத் தருவதாக இருந்தன, படையெடுக்க விருப்பமற்றவர்களுக்கும், இங்கு மக்களிடமிருந்த பலக்குறைவு, வாழ்க்கை நிலையாமை என்ற எத்தர்கள் கட்டிவிட்ட கவைக்குதவாதத் தத்துவ போதனை, படையெடுக்கவேண்டுமென்ற விருப்பத்தை அளித்தன.

உயர்ந்த கலாசாரம்-சிறந்த 'கடவுள்' கருத்துக்கள்—நிறைந்த 'ஆத்ம' விசாரணை—இவ்வளவுந்தான் ஏடுகள் எடுத்துக்காட்டவும், எத்தர்கள் படித்துக்காட்டவும், ஏதுமிலாதார்கள் இன்றும் இயம்பித் திரியவும், கண்டோம்—இன்றும் கண்டும் கேட்டும் வருகிறோம். இவ்வளவும், இந்தத் துணைக்கண்டத்தின் மீது அவ்வப்பொழுது நிகழ்ந்துவந்தப் படையெடுப்புகளை முறியடிக்க ஒரு துளியும் உதவவில்லை? என்ன காரணம் இதற்கு? அக்கிரமக்காரர்களை எதிர்த்துத் தொலைக்கவேண்டுமென்ற துணிவேன், அன்று, இங்கிருந்த மக்கள் கொள்ளவில்லை? அடிமை வாழ்விலே அவர்களுக்கு அதிக மோகமிருந்தது என்று கூறுவது

அதற்கான விளக்கமுறைத்தாகுமா? எவன் வந்தால் என்ன—யார் ஆண்டால் என்ன—என்ற நினைப்பை, இந்த நாட்டு மக்கள் கொள்ளக் காரணம் என்ன? நமது 'உயர்ந்த' நாகரிகத்திற்கு உரிமை வாழ்வு ஒத்துவராத பண்பா? நம்மிடை ஒற்றுமைக் குறைந்திருந்ததற்கும், வேற்றுமை நிலைத்திருந்ததற்கும், நமது 'உயர்ந்த' கலாசாரமும், 'வாழ்க்கைத் தத்துவமும்' மூலகாரணங்களாக இல்லாமல் இருந்தன என்று எவராலாவது சொல்லிவிட முடியுமா?

வேதத்தின் சாரம், கடவுட் கதையின் கருத்து, சனாதன தர்மம் அல்லது ஜாதீய பாகுபாடு, இந்த நாட்டு மக்களைப் பசையற்றவர்களாக அடித்துவிட்டன என்று கூறுவது குற்றமாகுமா? இதை மறுப்பதாலே, உயர்ந்த நாகரிகம் கொண்ட மக்கள், சிதைந்துச் சீரழிந்து போனதற்கு, சிந்தனையாளர்கள் விரும்பி ஏற்கும் வகையில், விளக்கமுறைத் தாகவேண்டும், வேதங்களின் அந்தத்தை அறிந்திருப்பதாக ஆடிப் பாடிக்கொண்டு இருப்பவர்கள்!

சனாதன தர்மம்—மக்களுக்குள்ளே பிறப்பினாலே உயர் தாழ்வு பேசும் பித்தலாட்ட தர்மம்—உழைக்காமல், பிறர் உழைப்பில வாழக் கற்றுக்கொண்டவர்கள் மிகத் தந்திரமாக ஏற்படுத்திச

[ தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க ]

Phone No. 4502
விலை அணா ஒன்று
Regd. No. M. 5458
[ இலங்கை 10 சதம்

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI
( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1 | சென்னை (8—11—49) வெளியூர் (9—11—49) | இதழ் 85

# இலக்கியச் செறிவும் கருத்துச் சிறப்பும் எங்கிருக்கிறது இந்தி மொழியில் ?

## கூறட்டுமே, கோபால் ரெட்டியார்!

"இந்தியாவுக்கு விடுதலை வந்தபிறகு, இந்தியத் தலைவர்கள் நம் நாட்டை உலகப் படத்தில் சரிநிகர் சமமாக வைக்கப் பாடுபடுகிறார்கள். இந்தியாவின் தனது கலை, கலாச்சாரம், இலக்கியம் இன்ன பிறவற்றின்மூலம் தனது சிறப்பைக்காட்டிக்கொள்ளாவிடில் அதன் பெருமை வெளிப்படாது. நாம் இப்போது உணர்ச்சி—உத்வேக மிக்க சமுதாயத்திடையே வாழ்ந்து வருகிறோம்; ஆகவே நமது இலக்கியமும் உணர்ச்சி—உத்வேகம் ... காலத்துக்கேற்றவர்களாய் ... செய்யக்கூடியதாய் இருக்க வேண்டும்" என்பதாக மந்திரி தோழர் கோபால்ரெட்டியவர்கள் கடந்த 5-ந் தேதியன்று சென்னையில் கூட்டமொன்றில் குறிப்பிட்டுள்ளார். அழகிய கருத்தை அழகுறச் சொன்னார். ஒரு நாட்டின் இலக்கியக்கலை, நாகரிகமேம்பாடே அதனை உலக நாடுகளுடன் ஒப்புவமைக் கூறுவதற்கு சான்று—சாதனமாகத் திகழ்வதாகும். இலக்கிய மன்பது நாட்டு மக்களின் வாழ்க்கைமுறையை சித்தரிக்க வேண்டுமென்பதோடு, மக்கள் நல்வாழ்வுக்கான நாகரிகக் கருத்துக்களையும் கொண்டு திகழ்தல் வேண்டுமென்பதையும் தோழர் கோபால்ரெட்டியார் எடுத்துக்கொண்டு, திறம்படப் பேசியுள்ளார். பாராட்டக்கூடிய முறையில் கருத்துக்களைக் கொட்டியுள்ளார். ஆனால்...

இலக்கியச் சிறப்பும் இதர நாடுகளின் பாராட்டும் விழையும் நம் மந்திரியார், இதற்கெல்லாம் அடிப்படையாக நாம் ஒவ்வொருவரும் இந்தி பயில வண்டும்; தாய்மொழி தமிழை விட்டொழித்து பொதுமொழி வியாபகத்துக்குப் பாடுபடவேண்டும் என்று அடுத்த மூச்சில கொட்டியிருக்கிறார். இலக்கியச் செறிவையும் சிறப்பையும் அதன் மூலம் ... நாடுகளின் பாராட்டுகளையும் ... மந்திரியார், இந்தியைப் ... முழுவதாலென்ன ... அதிக் ... டியுமே ... தான நமக்கு புலப்பட வில்லை. இந்திக்கு ... இலக்கணம் ...? கலைச் சிறப்பு, கருத்து மேம்பாடு ...? இந்தி மூலம் உள்ளபடி ஆதிய பயகண்ட மக்களின்

கலை—கலாச்சாரத்தை உலகுக்கு உணர்த்திவிட முடியுமா? இன்றைய நாகரிக சமுதாயத்துக்கான நற்கருத்துக்கள் இந்தியில் இவையிவை இருக்கின்றன வென்றாவது விரல் விட முடியுமா?

போகட்டும். இந்தி நற்கருத்துக்களைத் தரவேண்டாம்; நம்மிடையே நல்லெண்ணத்தை வளர்க்கவேண்டாம்; நாட்டில் நாடுகளிடையே நம் சிறப்பைமேலும் உயர்த்த வேண்டாம்; ... வது விளைவிக்காமலிருக்கிறதா என்று கேட்கிறோம். நான்கு ஜாதி—வருண பேதம் கற்பிக்கும் நச்சுக் கருத்துக்கள் அம்மொழியில் மலிந்து கிடக்கவில்லையா? மனிதனை மிருகமாக்கும் வெறித்தனத்தை புண்டாக்கக் கூடிய வேண்டாத பொய் நிறை புராண கசமாலங்கள் அதில் நிறைந்துகிடக்கவில்லையா? இதர பண்பட்ட மொழிகளைக் கெடுத்து சிந்தனைக் குணங்கள் அதில் எண்ணற்றிருக்கவில்லையா? உலக நாடுகள் எல்லாம் "இது ஒரு மொழியா?" என்று எள்ளி நகையாடும் தன்மையில்தானே இன்று இந்தி இருக்கிறது! இத்தகைய இந்தியைக்கொண்டு எப்படிப் புதிய இந்தியாவை உண்டாக்க விழைகிறார் மந்திரி கோபால்ரெட்டிதான் என்பது தான் நமக்குப் புரியவில்லை.

இப்படிப்பட்ட இந்தியின் வளர்ச்சிக்கும் அக்கத்துக்குமே, நன்றாள மும், செம்மைக் கருத்தும், இலக்கியச் செறிவுமிக்க ... தாய்மொழியைப் பலியிடச் சொல்கிறார். நல்ல கருத்தைக் கொண்டிருப்பவர் நாட்டும் நச்சமார்க்கத்தைக் கண்டு கவலைப்படுகிறோம்; வருந்துகிறோம். அவரது நிலைக்கு அநுதாபப்படுகிறோம்!

# "மயிலே, இறகு போடு" என்கிறார் முக்கர்ஜி!

## கள்ளமார்க்கெட் ஒழிப்பில் கைகொடுக்க வேண்டுமாம் பண முதலைகள்!

### முதலாளிகளாட்சியின் 'மூலமந்திரந்'தானே இது

இந்திய சர்க்காரின் கைத்தொழில், சப்ளை மந்திரி டாக்டர் சியாம பிரசாத் முக்கர்ஜி நகபுரியில 4-ந் தேதி பேசுகையில, தனிப்பட்ட முதலாளிகளாடு போட்டியிட சர்க்கார் விரும்பவில்லையென்று திட்டவட்டமாக இந்திய சர்க்காரின் 'முதலாளித்துவ'க் கொள்கையைத் தெளிவுபடுத்திவிட்டார். பொது மக்களும் பாட்டாளிகளும் இதனை ஏற்கெனவே நன்கு தெரிந்துகொண்டுதானிருக்கிறார்களென்றாலும், முக்கர்ஜி பேசியிருப்பது முதலாளிகளை மேலும் மேலும் 'தாஜா' செய்வதாகவேபாகும். முதலாளிகளின் மனம் குளிரும்படியும் பலப்பல 'திருவாய்மலர்ந்தருளியுள்ளார்' கைத்தொழில் மந்திரி.

பொருள்களின் மீது சர்க்கார் கட்டுப்பாடுகள் நிர்வாகம் சர்வ நாசமடையவும், கள்ளமார்க்கெட் புழுப்பு நிரம்ப நடக்கவும் முதலாளிகளின் பேருதவியினை நாடியிருக்கிறார் முக்கர்ஜி.

"மயிலே, மயிலே இறகுபோடு" என்ற தன்மையில் 'ஒத்துழைப்பைத் தாருங்கள், தாருங்கள்' என்று 'பஜனை' பாடியுள்ளார். கட்டுப்பாடு நிர்வாகம் சரியாக நடக்க உதவுங்கள், கட்டுப்பாட்டையே எடுத்துவிடுகிறேன் என்கிறார். மந்திரியாரின் வாக்குறுதி இல்லாத ஊருக்குப் போகாத வழியைக் காட்டுவதாகத் தான் இருக்கிறதே தவிர, நல்லெண்ணமும் காட்டும் நடைமுறைக் குகந்ததும் இருப்பதாகத் தோன்றவில்லை.

'அடிப்பது போல் அடிக்கிறேன், அழுவது போல் அழு' என்பது தான முதலாளிகளாட்சியின் மூலமந்திரம் என்பதை நாட்டு மக்களுள் பெரும்பாலோரும் தெரிந்துகொண்ட பிறகும், ஆளவந்த மந்திரிகள் ஏதேதோ பேசிக் குழப்புவதேன்? நன்கு தவே சொல்லிவிடலாமே, 'நாங்கள் முதலாளிகளின் பிரதிநிதிகளாகத்தான் பீடத்திலமர்ந்துள்ளோம்' என்று.

# மாலை மணி

சென்னை 8—11—49 செவ்வாய்க்கிழமை


# மூன்றும் முற்றுப் பெறவில்லை!

**(1) மக்களின் நன்மையை முதலாவதாகக் கவனித்தல்.**

**(2) இன்றியமையாத பொருள்களின் உற்பத்தியைப் பெருக்குதல்.**

**(3) விலைவாசிகள் நியாயமாக இருக்குமாறும், அவற்றின் தரம் நன்றாக இருக்குமாறும் பார்த்துக்கொள்ளுதல்.**

தொழிலுற்பத்தியைப் பொறுத்த வரையில், இவை மூன்றும்தாம் அரசாங்கத்தின் முக்கிய குறிக்கோள்களாகுமென இந்திய தொழில் சப்ளை மந்திரி தோழர் டாக்டர் சியாம பிரசாத் முகர்ஜி அவர்கள் குறிப்பிடுகிறார்.

இந்த மூன்று முக்கிய குறிக்கோள்களில், எந்த ஒன்றையாவது, மத்திய அரசாங்கமோ அல்லது மாகாண அரசாங்கமோ திறம்பட நிறைவேற்றித் தந்திருக்கின்றனவா என்றால், சென்ற மூன்று ஆண்டுகள் ஆட்சிக் காலத்தில், அதற்கு ஆதாரமாக எதுவும் அகப்படவில்லை.

மத்திய—மாகாண அரசாங்கங்களின் நடவடிக்கைகளை ஊன்றிக் கவனித்தால், முதலாளிகளின் நன்மையையும், காங்கிரஸின் நன்மையையும் கவனித்த அளவுக்கு, மக்களின் நன்மையை இவ்வரசாங்கங்கள் கவனித்ததாகத் தெரியவில்லை. மக்களுடைய — மக்களுக்காக — மக்களால் நடத்தப்படும் அரசாங்கமாகவேதான், தங்கள் அரசாங்கம் இருக்கும் என்று கூறி, ஆட்சிப் பீடம் ஏறினர்; இன்று, காங்கிரஸ்-முதலாளிகளுடைய; காங்கிரஸ்-முதலாளிகளுக்காக; காங்கிரஸ்-முதலாளிகளால் நடத்தப்படும் அரசாங்கமாக நடத்திக் காண்பிக்கின்றனர். இதை எப்படி பொது-மக்களின் நன்மைக்காகப் பாடுபடும் அரசாங்கம் என்று கருத முடியும்?

மக்களை வறுமை ஒரு பக்கம் வாட்டுகிறது; மற்றொரு பக்கம் வரிச்-சுமை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கப்படுகின்றது. குறைகளை எடுத்துக் கூற வசதி இல்லை; அதே நிலையில் குறைகளை எடுத்துக்கூற இருக்கும் சிறிதளவு உரிமையும் அடக்குமுறை அம்பால் கொன்று வீழ்த்தப்படுகிறது. பஞ்சம்—பட்டினி-பிணி—வேலையில்லாத் திண்டாட்டம் கொள்ளையோ கொள்ளை என்று கும்மாளம் போடுகின்றன; அந்த நிலைமைகளை எழுத-எடுத்துக் கூற உரிமையில்லை! இவைகளா மக்களின் நன்மையையே புரியும் குறிக்கோளின் அடையாளம்? இல்லை, இல்லை! ஒருக்காலும் இல்லை!!

உற்பத்தியைப் பெருக்குதல் அடுத்தக் குறிக்கோள் என்று குறிப்பிடுகிறார். காங்கிரஸின் மாபெருந் தலைவரிலிருந்து, மட்டரகத் தோழர் வரையில் அனைவரும் "உற்பத்தியைப் பெருக்கு உற்பத்தியைப் பெருக்கு" என்று முழக்கமிட்டு வருகின்றனர் செல்லுமிடங்களிலெல்லாம். எப்படி உற்பத்தியைப் பெருக்க வேண்டும்? பெருக்க என்ன வசதிகளைச் செய்து கொடுத்தார்கள்? அல்லது கொடுக்கிறார்கள்? நிறை உழைப்புத் தோள்கள் கொண்டார் வேலையின்றி வீதி சுற்றி வருகின்றனர். அவர்கள் உற்பத்தியைப் பெருக்கத் தயாராக இருக்கிறார்கள். எங்கே வேலை? எங்கே வசதி? எங்கே அரசாங்கம் செய்து கொடுத்தது! 'உற்பத்திப்பெருக்' என்றுவாயால் கூறி வருகிறார்களேயல்லாமல், தொழிற் பயிற்சி பெற்று வேலையின்றித் திண்டாடும் தொழிலாளர்களை எங்கே பயன்படுத்திக் கொண்டார்கள்? இந்நாட்டிலுள்ள வளத்தையும், மனித உழைப்பையும் அரசாங்கம் பயன்படுத்த நினைத்திருந்தால் உற்பத்தி எவ்வளவோ பெருகி இருக்குமே! போர்க்காலத்தில் தொழிற்பயிற்சி பெற்ற அனைவரும், தாம் கற்றுக்கொண்ட தொழிலறிவைப் பயன்படுத்த வழியில்லாமலே தானே அவர்களுடைய உழைப்பும் அறிவும் துருப்பிடிக்க விடப்பட்டிருகின்றன. அரசியலார் உற்பத்தியைப் பெருக்க முதலாளிகளின் துணையை நாடித்திரிகின்றனர்-தொழிலாளர்களைக் கொடுமைப்படுத்தி, அவர்கள் உழைப்பின் மீது தம் உல்லாசவாழ்வைக் கட்ட நினைக்கும் முதலாளிகளால், எப்படித் தேவையான அளவு உற்பத்தியைச் செய்துகாட்டமுடியும்? எப்படிச் செய்துகாட்ட நினைப்பர், கிராக்கியை ஏற்படுத்தி லாபம் சம்பாதிக்க எண்ணும் அந்த முதலாளிகள்? எனவேதான், உற்பத்திப் பெருக்கத் திட்டம் வெறும் வெளிப்பகட்டுப் பேச்சாக முடிந்திருக்கிறதேயல்லாமல் உருவானபலனைஏற்படுத்தவில்லை!

விலைவாசிகள் நியாயமாக இருக்கும்படி பார்த்துக் கொள்வதையும், முக்கிய குறிக்கோளில் ஒன்றாகக் குறிப்பிடுகிறார் தோழர் முகர்ஜி. அந்தக் குறிக்கோளிலாவதுஅரசாங்கம் வெற்றி பெற்றிருக்கிறதா என்றால், அதுவும் இல்லை! மிளகு, உப்பு, தேங்காய், சர்க்கரை ஆகிய இன்றியமையாப் பொருள்களின் விலைவாசிகள் எந்த நிலையில் இருக்கின்றன வென்று பார்த்தாலே, இனிது விளங்கும், காங்கிரஸ் ஆளவந்தார்களின் குறிக்கோள்களில் ஓசையிருக்கும் அளவுக்கு உருவான பலனேற்படவில்லை என்பது!

"முள்ளுமுனையிலே மூன்று குளம் வெட்டினேன், இரண்டு குளம் பாழ் ஒன்றில் நீரே இல்லை" என்ற பழமொழிக்கிணங்க, முகர்ஜி கொண்ட மூன்று குறிக்கோள்களில் இரண்டு பாழ், ஒன்று நிறைவேறவேயில்லை என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

குறிக்கோள் மூன்று! மூன்றும் முற்றுப்பெறவில்லை!

# வௌவால்களை விரட்டுங்கள்

## அறநிலையபாதுகாப்புச் சங்கத்தார் ஆணை

### பாழ் மண்டபங்கள் பயனுள்ள மண்டபங்களாகுமா?

"தேவை! தேவை!! தமிழ் நாட்டுத் திருக்கோயில்களில் தினமும் திருநடமாடும் திருவௌவால்கள், திருப்பெருச்சாளிகள் இவற்றை விரட்டியடித்துக் கோயிலைச் சுத்தப்படுத்தும் திருப்பணியை மேற்கொள்ள திருத்தொண்டர்கள் உடனே தேவை!!!"

இப்படி ஒரு விளம்பரம் சென்னைப் பத்திரிகைகளில் காணப்படுமானால் அதைக் கண்டு யாரும் ஆச்சரியப்படத் தேவையில்லை. ஏனெனில் நம் நாட்டுக் கோவில்களிலெல்லாம் வௌவால்களும், பெருச்சாளிகளும் கூடி ஆண்டவன் சந்நிதியை அசுத்தப்படுத்துகின்றனவாம். இந்த அசுத்தத்தை உடனே நீக்குமாறு ஹிந்துமத அறநிலைய பாதுகாப்புக் கழகத்தார் எல்லாக் கோயில்களுக்கும் உத்தரவிட்டிருக்கின்றனர்.

ஆகவே கோயில் நிர்வாகிகள் இனி இதுபற்றித் தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவார்கள் என்று தெரிகிறது. கோவில்கள் வௌவால்களின் வசஸ்தலமாக இருப்பதுமட்டுமல்ல, ஆந்தை, ஒட்டடை ஆகியவற்றுக்கும்இருப்பிடமாக இருக்கின்றனவாம். இது அரசியலாரே தரும் தகவல். இதிலிருந்தே தெரிந்துகொள்ளலாம் நம்நாட்டுக் கோவில்களின் சொத்து பயன்படாமல், பதுங்கிக்கொண்டு கிடக்கும் சொத்து என்பதை.

இப்படிச் சீரழிந்துகிடக்கும் இத்தலஸ்தானங்களைச்சீர்திருத்தி, அங்குள்ள வௌவால்களையெல்லாம் ஓட்டிவிட்டு,மக்கள் அறிவு வளர்ச்சிக்கு ஏற்ற இடமாக அவற்றைச் செய்ய அரசியலார் முன்வரவேண்டும். பள்ளிக் கூடங்கள் அமைக்க இடமில்லை என்னும் குறையைப் போக்க இதுவே நல்ல முறை. ஆண்டவன் சந்நிதியைச் சுத்தம் செய்வதென்றால வௌவால்களை விரட்டுவது மட்டும் போதாது, பயன்தெரிந்து பயன்படுத்தாத காரணத்தால் தான் ஆலயங்கள் வௌவால்களின் உறைவிடமாயின. ஆகவே, ஆண்டவன் உறைவிடம் என்பது நடமாடும் தெய்வங்களான மக்களின் பொதுமன்றமாகிவிட்டால் தானாகவே வௌவால்கள் ஓடும், தூசி விலகும், பாழ்மண்டபங்கள் பயனுள்ள மண்டபங்களாகும்.

## செய்ய வேண்டிய காரியம்!

ஜமீன்தாரி ஒழிப்பு சட்டமாகி விட்டபடியாலும், ஜமீன்தார்கட்கு நஷ்ட ஈடுத்தொகை தர வேண்டியது அவசியமென இன்றைய சர்க்காருக்குப் பட்டிருப்பதாலும், ஆனால் எவ்வளவு தொகை தருவதென இன்னும் நிர்ணயிக்கப்படவில்லையாயினாலும், முதலில் ஒரு பகுதியையாவது கொடுத்து ஜமீன்தார்களைத் திருப்திபடுத்தி, மீதியைப்பின்னர் கொடுப்பதென சென்னை மந்திரி சபை முடிவு செய்திருக்கிறதாம்.

# கோதுமைப் பிரசாரம்

## பயனுள்ளதாக இருக்கட்டும்!

கோதுமையையும் கோதுமைப் பொருள்களையும் பொது மக்களிடையே பரவச் செய்யவும் அதை அவர்கள் பெரிதும் விரும்பி உணவாக ஏற்றுக்கொள்ளும் வகையிலும் அதிதீவிரப் பிரசாரம் செய்ய சென்னை சர்க்கார் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது. 1951-ம் ஆண்டுக்குப் பிறகு வெளிநாடுகளிலிருந்தும் உணவுப் பொருள் இறக்குமதி யெதுவும் செய்வதில்லை யென்ற சர்க்கார் திட்டத்தை யொட்டியே இம்முயற்சி யெடுக்கப்படுகிறதாம்.

சர்க்காரின் கோதுமைப் பிரசார முயற்சி ஓரளவு பாராட்டத் தக்கதுதான். ஆனால் இதில் கவனிக்க வேண்டிய செய்தியொன்றுளது. சென்னை மாகாணத்தில்—ஏழைப் பாட்டாளி, நடுத்தர வகுப்பு மக்களிடையே கோதுமைக்குப் பரபரப்போ, செல்வாக்கோ இல்லாததற்குக் காரணம், அது இப்பகுதி மக்களுக்கு மனம் பிடிக்கா உணவு என்பதல்ல, சிறந்த உணவுதான்; சத்துள்ள உணவுதான். ஆனால் அதனை எப்படித் தயார் செய்து இனிமையாய் உண்ண வேண்டுமோ, அப்படிச் செய்வதற்கான வசதி வாய்ப்பு இல்லை இவருள்ளோர்க்கு. நெய்யும், பருப்பும், சர்க்கரையும் உருளைக் கிழங்கும் துணைப்பொருள்களாக அமைந்தால்தான் கோதுமையின் உணவுப் பொருள் மதிப்பு உயருகிறது. கோதுமை வளப்பமுள்ள குடும்பங்களில் இடம் பெற்றதும் இத்துணைப் பொருள்கள் சேர்க்கையால்தான். எனவே, ஏழையர் கோதுமையை விரும்பவில்லையென்றால், அவர்களிடையே சென்று பிரசாரம் செய்துவிடுவதால் ஒன்றும் நடந்துவிடப்போவதில்லை. அன்றாடம் வயிறு கழுவுவதையே வாழ்க்கை முழுதும் போராட்டமாக நடத்தி வரும் மக்களிடம் சென்று, 'கோதுமையை மாவாக்கிப் பிசைந்து, சர்க்கரை சேர்த்து, நெய்யில் ரொட்டி தட்டுங்கள்" என்றோ, "ரொட்டியோடு சரிக்குசரி அவித்த பருப்பையும் உருளைக்கிழங்கு 'மசாலா'வையும் சேர்த்து சுவைத்து உண்ணுங்கள்' என்றோ நாக்கில் நீர் சுரக்கப் பேசுவதால தினைத்துணையும் பயன் விளையப் போவதில்லை. வறுமைக் குழிகளினூடே வேலிச்சிரிப்புத்தான் தோன்றும் கிராமமக்களிடையே. சர்க்கார் பிரசாரகர்கள் இது போன்ற காரியத்தைத் தான் செய்வர்; செய்திருக்கின்றனர்.

ஏழை எளியவர் எப்படி இலகுவாய்க் கோதுமையைத்தயார் செய்து உணவாகக் கொள்ள முடியுமோ அம்முறைகளைப்பிரசாரம் செய்ய வேண்டும். அரிசியைப்பயன் படுத்தி வரும் ஏழை மக்களுக்குக் கோதுமை வழங்கப்பெறு மேல், அரிசி தயாரிப்பில உள்ள எளிமை இதிலும் இருக்தாக வேண்டும். இல்லையேல் பயனில்லை. இது சாத்தியப்படாதபடசத்தில் ஏழையர்க்கும் நடுத்தர வகுப்பாருக்கும் முழு அளவு அரிசியை மட்டும்கொடுத்துவிட்டு, வசதியுள்ள மக்களுக்குக் கோதுமையை விநியோகிக்கவேண்டும். அப்போதுதான் திட்டம் உருப்படும். சர்க்கார் மேற்கொள்ளுவரா?

# டிராக்டர்கள் இறக்குமதி

இம்மாதம் மேலும் 365 புதிய விவசாய டிராக்டர்கள் வேலை துவகுமென்றும், அவை பெரிதும் ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்த தேவார பகுதியிலும், மத்திய பாரத், மத்திய மாகாணம், போபால் ஆகிய பகுதிகளில் கைப்பற்றப்பட்ட எட்டு லட்சம் ஏக்கர் நிலத்திலும் பயன்படுத்திக்கொள்ளப்படுமென்றும் இந்திய சர்க்கார் உணவு உற்பத்தி கமிஷனர் தோழர் ஆர். கே. பட்டில் அறிவித்துள்ளார்.

சர்வதேச பாங்கியிலிருந்து கடனாகப் பெற்ற ஒரு கோடி டாலர் தொகையைக்கொண்டே மேற்படி டிராக்டர்கள் வாங்கப்பட்டனவாம்.

நாட்டின் உணவு உற்பத்தியை 1951-க்குள் 44 லட்சம் டன் அதிகப்படுத்தும் திட்டத்தில் இந்திய சர்க்கார் ஏற்பாடு செய்து வருகிறதென்றும் அவர் குறிப்பிட்டார். இத்தகைய உணவு உற்பத்தித் திட்டங்களால் பயன்பெற்ற விவசாயிகளிடமிருந்து அதிக உற்பத்தியின் அறுபது சதவிகிதத்தைச் சர்க்காரே கொள்முதல் செய்துகொள்வர்.

## உலக நெருக்கடி யாரால் தீரும்?

உலக நெருக்கடி மிக்க பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க, காந்தியடிகளின் கொள்கையைக் கடைப்பிடித்தால்தான் முடியுமென்று, பண்டிட் நேரு கூறுகிறார்.

இந்து மதத்தைப் புனர் நிர்மாணம் செய்தால் உலக நெருக்கடிகள் தீர்ந்துவிடுமென்று ரா. சு. சே., ஆர்யசமாஜ, இந்துமகாசபை கூட்டு வாக்கம் கூறுகிறது.

யக்ஞங்கள் செய்தால் உலக நெருக்கடிகள் தளர்ந்துவிடுமென்கின்றன சனாதன தாபனங்கள்.

உலகப் பிரச்சினைகள் ஒவ்வொன்றையும் தீர்க்க, முன்னாளில் வாழ்ந்த தீர்க்கதரிசிகளின் உபதேசப்படியும், இயேசுகிருஸ்துவின் போதனைப்படியும் மக்கள் நடந்தால் தான் முடியுமென்று அமெரிக்காவின் தலைவர் ட்ருமன் ரேடியோ மூலம் தெரிவிக்கிறார்.

இதேபோன்று ஜப்பானியர் புத்தபிரானின் போதனைகளை பின்பற்றவேண்டுமென்றும், அரேபியா முகம்மதுநபியின் போதனைகளைப் பின்பற்றவேண்டுமென்றும், உலகப் பிரச்சினைகள் தீர மருத்துவம் கூறுகின்றன.

ஆனால், இவற்றையெல்லாம் பின்பற்றிவந்த மக்கட் சமுதாயம், இது வரை அடைந்த நன்மைகளைவிடப் பிளவும் மதால்லைகளும்,வாழ்க்கைச் சங்கடங்களும், ஆதிக்கப் போராசையும், ஆக்கிரமிப்புக் கருத்தும் பெருக்கிட்டப்பதையே கண்டனுபவித்து வந்திருக்கின்றனர் என்பதை உணராததும், மீண்டும் மனித சமுதாயத்தை ஏமாற்றும் வகையிலேயே தலைவர்களென்போர் பேசிவருவதும் உலகத்திற்கே ஒரு பெருந்துரோகமிழைப்பதாகும். உலகப் பிரச்சினைகள் தீரப் புதிய முறைகள் காண உலகத் தலைவர்கள் ஒன்றுகூடி, ஆதிக்க ஆக்கிரமிப்பு ஆசையைவிட்டுத் தொலைத்து நேரிய வழியில் திட்டங்கள் தீட்ட வேண்டும் இதற்குப் பழைகாலத் தீர்க்கதரிசிகளின் கொள்கைகள் பயன்படுமா? பயன்பட்டுள்ளதா இன்றுவரை?

# பத்து ஆண்டு காலம் பகுத்தறிவுப் பணிபுரிய அனுமதியளிக்கட்டும்!

## நாட்டின் நலிவைப் போக்கி மக்கள் நலம் பெறச்செய்வோம்

## பண்டத்தின் தன்மையை உணர்வோர் கருத்தின் தன்மையையும் உணரட்டும்

## புதுவயல் தமிழ் மன்ற ஆண்டு விழாவில் அண்ணாத்துரை

[1—11—49 செவ்வாய்க்கிழமையன்று புதுவயல் தமிழ் மன்றத்தின் 2-வது ஆண்டு விழாவில் கலந்துகொண்ட தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், இருதயசாமி, அண்ணாத்துரை ஆகியோரின் சொற்பொழிவுச் சுருக்கம் இங்கே தரப்படுகின்றது.]

### ஈ. வெ. கி. சம்பத்

"இவ்வூர் தமிழ் மன்றத்தின் இரண்டாவது ஆண்டு விழாவிற்கு என்னைத் தலைமை தாங்கப் பணித்தமைக்கு, என் நன்றி. இந்த நாட்டில் தமிழர்களாகிய நாம் ஓர் தனி இனம்; தனிக் கூட்டம்; தனிக் குடும்பம். இந்த நாட்டுத் தமிழ்ப் பண்டிதர்கள், வெகுபிற்போக்கான முன்னாள் நிலையை மாற்றி, தனித்தமிழ் நூலாகிய குறளைக் கற்க வேண்டிய நிலையை உண்டாக்கிய நிலையைக் கண்டு மகிழ்ந்த நாம் இன்றுள்ள நிலைமையைக் காண வருந்த வேண்டியிருக்கிறது. இன்று இந்தி நம் நாட்டில் புகுத்தப்படுகிறது. தமிழ் மொழியை அழிக்க முயற்சி எடுக்கப்படுகிறது. இந்த நிலை மாற தமிழர் ஒவ்வொருவரும் கலைத் துறையில் பாடுபட முன் வர வேண்டுகிறேன். இந்த நேரத்தில் நாம் மறந்து, ஏமாந்து போனோமானால் அணைந்த தமிழ்விளக்கை ஏற்ற இன்னும் ஆயிரம் ஆண்டுகள் பாடுபட்டாலும் முடியாத நிலையில் போய்விடும். இன்று நான் வரும்போது கோட்டையூர் புகைவண்டி நிலையத்தைப் பார்த்தேன். மேலே இந்தியிலும், மத்தியில் ஆங்கிலத்திலும் அதற்கடியில் தமிழிலும் கோட்டையூர் என்று பெயர் போட்டிருந்தது. அதைக் காணுகின்றபோது இதை இப்படியேவிட்டுக்கொண்டே போனால், கொஞ்சம் கொஞ்சமாகத் தமிழன் ஏமாந்துவிடக்கூடும் என்று கருதி, அடியிலிருக்கிற தமிழ்ப் பெயரையும் எடுத்துவிட எண்ணிவிடும் அரசாங்கம். நமது மாகாணத்தின் கல்வி மந்திரி தோழர் மாதவமேனன் அண்மையில் பெயர்களை மாற்றுவது, அதாவது, வேதாசலம் என்ற பெயரை மறைமலை என்றும், வேதாரண்யம் என்பதைத் திருமறைக்காடு என்றும் மாற்றுவது சிறந்த முறையாகாது. என்றும், அறியாமை என்றும் பேசியிருக்கிறார். தமிழனைத் தனித் தமிழில் பேச உரிமை அற்றவனாக அரசாங்கம் நினைக்கிறது. இந்நிலை மாற வேண்டும், மாற்ற வேண்டுவதற்கு இந்தத் தமிழ் மன்றத்தார் மக்களிடையே பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்." மேலும் சமபந்தி பேசும்போது, ஆத்மார்த்திகத் துறையில் விளையும் தீமையையும் விளக்கி சுமார் ½ மணி நேரம் பேசினார்.

### இருதயராஜ்

தோழர் இருதயராஜ் அவர்கள் பேசியதாவது:—

"இந்தக் கழகத்தின் 2-வது ஆண்டு விழாவில் என்னைக் கலந்துகொள்ளச் செய்த மன்றத்தாருக்கும், தலைவர் அவர்களுக்கும் என் வணக்கம். தமிழன் ஒரு காலத்தில் முன்னிலையில் நின்றான்; பிறகு தாழ்ந்தான். ஆனால் இன்று தமிழன் முன்னேற முனைந்துவிட்டான். இந்த உணர்ச்சியைக் கண்டு நம்மால் பெருமிதமடையாமல் இருக்க முடியவில்லை. தமிழ் மொழி, நாட்டில் உள்ள எல்லா இடங்களிலும் கல்லூரிகளிலும், கலாசாலைகளிலும், யூனிவர்சிடி போன்ற பெரும் பெரும் மன்றங்களிலும் தழைக்க முன் வந்துவிட்டது. 150 ஆண்டுகளாக அன்னியனின் ஆட்சியில் அடிமைப்பட்டுக்கொண்டிருந்த நாம் இன்று இந்த நிலைவந்தது கண்டு நான் மகிழ்ச்சிகொள்கிறேன். ஒரு காலத்தில் இராமாயணக் கவிகளையும், புராணப் புத்தகங்களையும் கல்லூரிகளில் மாணவர்களுக்கு அன்னிய மொழி கலந்த தமிழில் பயின்று வந்துள்ளார்கள். ஆனால் இந்த நிலை மாறியதற்குக் காரணம் யார் என்றால் கூட்டத் துவக்கத்தில் வரவேற்பு உரை கூறிய நண்பர் கூறியபடி தமிழ் நாட்டின் பெர்னாட்ஷா என்று அழைக்கப்படும் பெருந்தகை அண்ணாத்துரை அவர்களின் அரிய முயற்சியாலும், பேச்சாலும், எழுத்தாலும் தமிழ் தனித் தன்மையில் வாழ முற்பட்டது. தோழர் அண்ணாத்துரை அவர்களின் பேச்சையும், எழுத்தையும், நாடகத்தையும் சினிமாக்களையும் நாம் காணுகின்றபோது ஓர் புத்துணர்ச்சி கொள்கிறோம்." மேல் நாட்டில் மக்களுக்குள்ள மொழிப்பற்றை விளக்கிப் பேசிய பின் தமிழைக் காப்பாற்ற ஒவ்வொரு தமிழனும் ஆர்வத்துடன் முன்வரக் கேட்டுக்கொள்கிறேன் என்பதாகப் பேசினார்.

### அண்ணாத்துரை

தோழர் அண்ணாத்துரை அவர்களின் சொற்பொழிவின் சுருக்கம் வருமாறு:—

"தலைவர் அவர்களே! பெரியோர்களே! புதுவயல் தமிழ் மன்றத்தார் நடத்துகின்ற 2-வது இவ்வாண்டு விழாவுக்கு வந்த என்னை ஆர்வத்துடன் வரவேற்றீர்கள். நானும் ஆர்வத்துடன் கொண்டாடுகிறேன். இந்த நிலை இன்றுதான். இதற்குமுன் எங்கேயோ ஒரு மண்டபத்தில், நாலைந்து பேர்களின் முன்னிலையில் இதைப்போன்ற ஆண்டுவிழாக்கள் நடைபெறும். இன்று அப்படியா? இல்லை! ஆயிரக் கணக்கில் இருக்கின்றீர்கள். இதைக் காணுகின்ற நான் பெருமகிழ்ச்சிகொள்ளுகிறேன்.

தமிழ் மொழி முன்னேற இங்குள்ள பலர் அண்ணாத்துரை வர வேண்டுமா என்று நினைப்பர். நானும் எனது நண்பர்கள் பலரும் இவ்வூருக்கு இவ்வாண்டு விழாவிலே கலந்துகொண்டதுபற்றி இம் மன்றத்தாருக்கு ஏதாவது கெட்ட பேர் வந்தாலும் வரும்! அவ்வளவு பொல்லாதவனா நான்? சாக்காரைக் கண்டிப்பவன் நான், ஆனால் என்னிடத்திலே வெடிமருந்து இல்லை! கோவிலை இடிப்பவனா? மண் வெட்டி, கடப்பாரை கிடையாது! புராணத்தைக் காய்பவனென்றும் நினைப்பீர்கள்! நான் சாதாரண மனிதன்தான். இருந்தாலும் நாட்டாலும் சர்க்காருக்கு நான் எழுதிய புத்தகத்தின் மீதுதான் பிரியம் அதிகம்! சாக்காருக்கு வேலை அதிகம். நம் மாகாண மந்திரிகளுக்கும் வேலை அதிகமிருக்கிறது நாட்டிலே வாழும் மக்களுக்கு நல்வாழ்வு வாழ வசதி இல்லை! போதிய உணவு கிடையாது! தேவைக்குத் துணி கிடையாது. இப்பொழுது சாக்கரையும் கிடைப்பதில்லை! ஓர் புறம் தொழிலாளர் துயர், பாட்டாளியின் பரிதாபக் குரல் இவைகளைப் போக்குவதற்கு நேரமும், மனமும் இல்லாத நமது மாகாண மந்திரிகளுக்கு என் புத்தகத்தைப் படிக்க நேரமிருக்கிறது! படித்து அதில் ஏதோ குற்றமிருப்பதாகக் காட்டி, 153A. பிரிவில் என் மீது வழக்கு தொடுத்திருக்கிறார்கள். நேற்று அந்த வழக்கிற்காக திருச்சிக்கு வந்த நான் இவ்வாண்டு விழாவில் கலந்துகொள்ள இன்று இங்கு வந்துள்ளேன். இந்தப்பகுதியிலேயே மக்களுக்குத் தமிழார்வமும் மொழிப்பற்றும், பகுத்தறிவுவாடையும் வீசுகிறது. இந்த ஆர்வத்தை இந்தத் தமிழ் மன்றம் நன்றாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுகிறேன். "எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்ற குறள்படி, யார் பேசினாலும், யார் எந்தக் கருத்தைச் சொன்னாலும், சொல்லுகிறவர்கள் பேச்சையும், அந்தப் பேச்சில் உள்ள உண்மையையும் உணர்ந்து பார்க்க வேண்டுகிறேன். செட்டி நாட்டுப் பகுதி மக்களுக்கு உணர்ந்து பார்க்கும் தன்மையிருக்கிறது. பண்டத்தைப்பற்றி ஆனால் கருத்தை உணர்ந்துபார்க்க வேண்டுகிறேன். இதுவரை பர்மாவிலே இனி இந்த நாட்டிலே.

இந்நகரின் மூக்கிய இடத்தில் நின்றுகொண்டு ரோட்டில் செல்லுகின்ற ஒருவரைப் பார்த்து தமிழனுடைய கலை தெரியுமா? என்று தோழர்கள் கேளுங்கள்! மணிமேகலை தெரியுமா? தெரியாது! சீவகசிந்தாமணி தெரியாது. சிலப்பதிகாரம்? தெரியாது! குண்டலகேசி வளையாபதி? தெரியாது? புறநானூறு, அகநானூறு, 'பத்துப்பாட்டு' எட்டுத்தொகை, கலிங்கத்துப்பரணி தெரியுமா? என்று கேளுங்கள், தெரியாது என்றே பதில்வரும். அதே தோழரைப் பார்த்து, அல்லி அரசாணிமாலை, அபூர்வ சிந்தாமணி தெரியுமா? என்று கேளுங்கள். நூற்றுக்குநூறு தெரியுமென்பார். நல்லதங்காள் கதை நாடகத்திலே பார்த்திருக்கிறேன் என்பார். கதையை அப்படியே சொல்வார்; பெரிய எழுத்துவிக்கிரமாதித்தன் கதை, புலந்திரன் சிந்து, பவளக்கொடி பாமாலை: சத்தியவான் சாவித்திரிக்கதையைக் கண்டவர்போல் கூறுவார். ஏன் ராஜேந்திர சோழன் கதை தெரியவில்லை? ஆனால் தசரதர் கதை தெரிகிறது!! மதுரைச் சங்கத்தமிழ் தெரியவில்லை. சேரன் செங்குட்டுவன் இமயத்திலே கொடி பொறித்தது தெரியவில்லை. மறத்தமிழன் அகில உலகுக்கும் சந்தனம், தேக்கு, மயில்தோகை, முத்து பவளம் இன்னபலவற்றைக் கொடுத்தது தெரியாது. தமிழ் நாட்டிலே வாழுகின்ற மக்களுக்கு எது தேவை? இது தேவையா? அது தேவையா? தோட்டத்தில் நல்ல பழங்கள் பல இருக்க. நல்ல பழத்தைவிட்டுக் கெட்டதைக் கொண்டுவரும் தோட்டக்காரர்களைப் போல, தோட்டத்தில் இருக்கும் நல்ல மலர்களைக் கொய்யாது, கெட்ட மலர்களைக் காய்ந்துவரும் பெண்களைப் போல, நல்லவை நாட்டில் பல இருக்க, நமக்குத் தேவைப்படாத பலவற்றை நாம் விரும்புகிறோம்! இந்த நிலையைப் போக்க, இம் மன்றத்தார் பாடுபட வேண்டும்.

ஏன் தமிழிடத்தில் ஆர்வம் குன்றிவிட்டது? தமிழ் நாட்டு மக்களின் தன்மையைக் காண மேல் நாட்டார் அறியும் தன்மைகொண்ட கலை, தம் காலத்தில் இல்லை நம் நாட்டில் ரேடியோவைத் திருப்பினால் ஒருவர் பாடுவார், "சீரங்கநாதரே ஏன் பள்ளி கொண்டீரையா" என்று. ரெங்கநாதர் படுத்திருப்பதைப்பற்றி இவருக்கென்ன கவலை, அவர் படுத்திருக்கும் நிலையைக் கேட்க இவர் ஏன் இப்படிப் பாட வேண்டும்? இதுதான் இப்போது இந்த நாட்டிற்கு வேண்டியதா? நாடகத்தை எடுத்துக்கொண்டால் நாட்டிலே நடப்பது நல்ல தங்காள் கதையைப் போன்ற பல இதைப் போன்ற நாடகங்களால் மக்கள் நல்லறிவு பெற முடியுமா? அத்தகைய பாட்டுகளாலும், அத்தகைய நாடகங்களாலும், புராணக் கதைகளாலும் தமிழ் மொழியின் மேல் மக்களுக்குப் பற்று குறைந்துவிட்டது. தமிழன் எப்படி வாழ்ந்தான், இமயம் வரை ஏன் சென்றான், அயல் நாடுகளில் எப்படி வியாபாரம் செய்தான், என்பதைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுங்கள். இல்லையானால், தமிழ் மக்கள், தமிழ் மொழி, வாழ, வளர தமிழ் நாட்டிலே இன்னும் சில காலத்திற்குள் இடமிருக்காது என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

இந்த உலகம் ஒரு ரயில்வே சந்திப்பு மாதிரி. மோட்ச லோகத்து வண்டியை எதிர்பார்த்து, வாழ்க்கையையும், நிலையையும் நினையாது இருக்கின்றனர் நம் நாட்டு மக்கள்.

வாழ்க்கை மாயாஜாலம், இன்றைக்கிருப்பாரை நாளைக்கிருப்பார் என்றெண்ணவும் திடமில்லை என்று எண்ணுகின்றவர்களுக்கு அவர்கள் வாழும் நாட்டிலே டாலர் குறைந்தாலும், மற்றவை குறைந்தாலும் என்ன கவலை?

வாலிபர்களுக்குக் கூறுகிறேன், மக்களின் மனப்போக்கு மாறு முன்பு நாட்டில் நல்வாழ்வு கிட்டாது. நாடு நல்ல நிலை எய்த வேண்டுமானால், உலகம் அநித்தியம் என்று எண்ணும் நிலை மாற வேண்டும். இவைப் போக்கப்பட்டால் வாழ்க்கையில் உள்ள வாட்டங்கள் மாறிவிடும்.

"ஆண்டவன்" நமக்காக இமயத்தைப் படைத்தார், குமரியை உண்டாக்கினார். காட்டை, கழனியை, வீட்டை, நாட்டை, இதுதுணையும் கொடுத்தார். இதுதுணையும் கண்டுவிட்டு, ஆண்டவனிடம் செல்ல நினைத்தால் "ஆண்டவன்" நம்மைப் பார்த்து பைத்தியம் பிடித்துவிட்டது என்று சிரிக்கத்தான் செய்வார்.

கலைக்டரிடம் சென்று காயத்தைக் காட்டி, இதற்கு மருந்து தடவவேண்டுமென்று கேட்டால், என்ன சொல்லுவார்? எனக்கு இதுவா வேலை, நாட்டுக்கு வேண்டியதைச் செய்ய எனக்கு வேலை அதிகம் இருக்கிறது என்று தானே சொல்லுவார். அதுபோல கடவுளுக்கு எவ்வளவு பொறுப்பான வேலை இருக்கிறது. அவனியை பரிபாலிக்கும் பொறுப்பான வேலை இருக்கிறது; அவ

[தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க]

# உழைப்புக்கு மதிப்பளிக்கும் உள்ளம் தேவை

## அறிவு வளர்ச்சிக்கு ஆதரவு தாருங்கள்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

ரைக் கஷ்டப்படுத்தலாமா? வீடு கட்டி அதற்குப் பக்கச் சுவர் எழுப்பி, அதற்குடைய வைகளைச் சேகரித்து, பண்டங்களைப் பாதுகாக்கக் கதவுகளுக்குப் பூட்டுத் தேடி, அடுத்த வருக்கு வேண்டியதை அளிக்க மனமில்லாமல் அளிக்க மனம் வந்தாலும் ஆஸ்தியில் அளவு குறைந்துவிடும் என்ற எண்ணம் தோன்றி தடுத்து வாழ்ந்து வருகிற நாம் இந்த உலகை மாயை என்று ஏன் சொல்லுவது? இந்த உலகில் தோன்றியவை இங்கு வாழுகின்ற மக்களுக்குத்தான் சொந்தம். இந்த உலகில் அனுபவிக்கும் இன்பம்தான் நிரந்தரமானது. மோட்சலோகத்தைப்பற்றிக் கவலைப்படாமல், இங்கு வாழுகின்ற பஞ்சைப்பாராரிகளுக்குப் பகுத்தறிவுச் சொல்லுகின்ற எங்களைப் பார்த்து, நாத்திகர் என்று நினைப்பார்! யார் நாத்திகன், நாங்களா? அல்லது "கடவுளை" "ஏமாற்றுபவர்களா? இந்த உலகில் வாழப் பிறந்த நமக்கு மோட்சத்தில் வாழவேண்டும் என்று ஏன் நினைக்கவேண்டும். இந்த உலகை வெறுக்கச் சொல்லும் புத்தகங்கள், பாட்டுக்கள் எல்லாம் நாட்டுக்கு, மக்களுக்குத் தேவையில்லை, என்று மக்களுக்குச் சொல்ல வேண்டும். இம்மன்றத்தார் உலகைத் திருத்த முடியாவிட்டாலும், நாம் வாழுகின்ற நாட்டையாவது திருத்த முன்வர வேண்டும். நம்நாட்டில் காவிரி, தாம்பிரபரணி, போன்ற வற்றாத உயிர் நதிகள், தங்கத்தைத் தந்துகொண்டே இருக்கும் கோலார் தங்கச்சுரங்கம், காடு, கழனி இன்னபிற இருந்தும் ஏன் மலேயாவுக்கும், சிங்கப்பூருக்கும், சிலோன் தேயிலைக் காட்டிற்கும் செல்லுகிறான் தமிழன்—இந்நாட்டில் வாழப் பிறந்தவன் ஏன் இங்கு வாழ வழியில்லாமல் வெளிநாடுகளுக்குச் செல்லவேண்டும்? எல்லாம் இருந்தும் ஏன் எடுப்பார் கைப்பிள்ளையாக வேண்டும் நாம்?

இப்பகுதியிலே உள்ள மக்கள் பர்மா நாட்டிற்குச் சென்றார்கள். வாணிபத்துறையில் நுழைந்தார்கள், இன்று அங்குச் சம்பாதித்த பர்மா நாட்டுப் பணம் கிடைக்கவில்லை. அங்கு விரட்டுகிறார்; நாம் துயரத்தைத் துணைகொண்டு வாழுகிறோம். இங்கிருந்து சொந்த நாட்டைவிட்டுப் பிழைப்பிற்குச் சென்ற தமிழ் மக்கள் பர்மா நாட்டிலிருந்து துரத்தப்படுகிறார்கள், மற்றும் பல கஷ்டங்களுக்கு, இன்னல்களுக்கும் இரையாகிறார்கள் தமிழ் நாட்டினர்—ஏன் அங்கு இத்துன்பத்தைத் துயரத்தைப் பெறவேண்டும்—இங்கு என்ன இல்லை? எல்லாம் இருக்கிறது. நம் நாடு இயற்கையிலே வளம் நிறைந்த நாடு: லண்டன் நகரங்களைப் போன்று மேதைகளைப் பிற நாட்டை எதிர்பார்க்கின்ற துர்பாக்கியம் நம்நாட்டிற்குக் கிடையாது. அட்லி ஆயுட்காலமுழுவதும் சர்ச்சில் சாகும்வரையிலும் லண்டன் நாட்டுப்பகுதியிலே தோண்டித் தோண்டிப் பார்த்தாலும், அரைப்பவுன் தங்கத்தைப் பார்த்திட முடியுமா? நம நாட்டிலே உள்ள கோலார் தங்கச்சுரங்கம் தலைமுறை தலைமுறையாகச் சலிக்காமல் தந்துகொண்டே இருக்கிறது. தங்கத்தை—இவ்வளவு வசதிகள் வாழ்க்கை வாழ்வதற்கு நம்நாட்டில் நமக்கிருந்தும் நாம் வெளிநாடு செல்லும் நிலை நமக்கு ஏன் வந்தது—வாழ்க்கையை மாயமாக எண்ணியதால்!

### விஞ்ஞான அறிவு தேவை

காலைக்கருக்கிலிருந்து மாலைவரை கூலிவேலை செய்யும் கந்தன் ஆறு அணா வாங்குகிறான். அவன் ஆறு அணாவைப் பெற்றவுடன் உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் தனக்குக் கிட்டவில்லை என்று கண்ணீர் சிந்துகிறான். இதை மாற்றும் மருந்தாக்க கருங்மரத்தடியில் இருக்கிற ஜோஸ்யனிடம் சொல்லுகிறான்; வறுமை போக வழி உண்டா என்று கேட்கிறான் அவன், 'வறுமைபோகவழியா பன்னிரெண்டு நம்பருக்குள் ஒன்றைச் சொல்' என்கிறான் இவன் வறுமைபோகும் வழியைக் காண ஆவலுடன் ஐந்து என்கிறான் ஐந்தா; அடுத்த மாதம் வரைக்கும் இப்படித்தான் இருக்கும், இதை மாற்ற மகேஸ்வரனாலும் முடியாது. என்று அறிவுக்கும் வாழ்க்கைக்கும் சுவர் எழுப்பி விடுகிறான், கந்தன் வாங்கிய கூலியில் இரண்டணாவை ஜோஸ்யனுக்குக் கொடுத்துவிட்டு, மீதியிருக்கும் நாலணாவிற்கும் தன் குடும்பநிலைக்கும் உள்ள தூரத்தை எண்ணிக்கொண்டே 'ஆண்டவன் விட்டவழி', "அவனன்றி ஓரணுவும் அசையாது" என்ற நிலையில்தான் செல்லுகிறான்—கொஞ்சம் சற்று நிலை உயர்ந்த படித்த தோழர்கள் அக்கிரகாரத்தில் இருக்கும் அய்யரிடம் செல்லுகிறார்கள். அய்யர் அக்டோபர் போய அடுத்த நவம்பரில் தான் நல்லகாலம் வரும் என்று புள்ளிக்கணக்குடன் கூறுகிறார்.-நம்நாட்டில் படித்தவர்களும் பாமரர்களும், இதைத்தானே விரும்புகிறார்கள். அறிவை, அந்நிய நாட்டுக்காரர்கள் கண்டுபிடித்த விஞ்ஞான வளர்ச்சியைக் காண செலவிடுவதில்லை!

### உழைப்புக்கு மதிப்பும் அறிவுக்கு ஆதரவும் தேவை

நமக்கு உழைப்புக்கு மதிப்பளிக்கும் உள்ளம் இருக்க வேண்டும்-அறிவு வளர்ச்சிக்கு ஆதரவு தரவேண்டும், அறிவு வளர்ச்சியை யார் பரப்பினாலும், எந்தப் புத்தகம் கொடுத்தாலும் அதை கண்டிப்பாக நாம் அனைவரும் ஆதரிக்க வேண்டும். புராணப்படி ஆறுதலையை கட்டிக்கொண்டுவரும் வள்ளி திருமண நாடகம் நமக்கு தேவையா? நம நாட்டிலிருந்து இந்தியப் பிரதமர் பண்டித நேரு அமெரிக்கா சென்றிருக்கிறார். அவர் அங்கு காணவேண்டுமென்று நினைத்தது, திசை கண்ட ராவணன் நாடகத்தை காணவேண்டுமென்று நினைத்தால், திசை கண்ட ராவண நாடகத்தை காண முடியுமா, அவர் கண்டால் ஆபிரகாம் லிங்கனின் நாடகத்தைத்தான் காணலாம், நம தமிழ் நாட்டைப்போல் அங்கு நாடகங்களையும் சினிமாக்களையும் காண முடியாது. இந்த நாட்டில் உள்ளவர்களுக்குச் சாக்ரட்டீஸ் நாடகம் தெரியுமா? பார்த்ததுண்டா, வள்ளி திருமணத்தைத் தவிர.

### எப்படி முன்னேற முடியும் ?

நான் படிக்கவேண்டுமென்று எண்ணினேன், M A. வரை படித்தேன். எழுதவேண்டியவைகளை எழுதினேன். கடவுள் தடைசெய்யவில்லை. நான் கடவுள் துவேஷியாக இருந்தால் சிவன் சூலாயுதத்தால் குத்தட்டுமே! விஷ்ணு சக்ரத்தை விடட்டுமே! ஏன் செய்யவில்லை— செய்யமுடியாது. நம மாணவர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டுப் படித்தாலும் பள்ளியிலே படிக்கிற அறிவுக்கும், வீட்டிலே படிக்கிற அறிவுக்கும் வித்தியாசம் உண்டு.

நம பெண்கள் பையனைப் பள்ளிக்கு அனுப்பும் போது சகுனம் பார்த்து அனுப்புகிறார்கள். பள்ளியிலே பூகோளம் படிக்கிறான். வீட்டிலே ராகு, கேது சூரியனைப்பற்றிய கதைகளைக் கேள்விப்படுகிறான் கங்கை என்றால் சிவபெருமான் தலையில் இருக்கும் பெண் என்று பள்ளிமாணவன் எழுதினால் மார்க்கு கிடைக்குமா? உலகம் உருண்டை என்று பள்ளியில் படித்துவிட்டுப் புராணீகரிடத்திலே தட்டை என்று படித்தால் பையன் எப்படி முன்னேற முடியும்?

### தடை செய்யாதிருந்தால்...?

நமது மாணவர்களுக்கு இரட்டைக்கருத்துக்களைப் புகுத்தினால் மாணவர்கள் எப்படி முன்னேற முடியும்? மாணவர் முன்னேற வேண்டுமானால், உலக அறிவியலைத் தமிழிலே சொல்லிக் கொடுக்கவேண்டும் உலகம் எப்படி மாறவேண்டும் என்பதை மக்களைச் சிந்திக்கத் தூண்டும்படியாகச் சொல்லவேண்டும். நல்ல ஏடுகளை எழுத அரசாங்கம் ஆதரவு கொடுக்கவேண்டும். அப்படியில்லாமல் எழுதிய ஏட்டிற்கு ஜாமீன் கேட்கிறார்கள். நான் கூறுகிறேன், 10 வருடம் அறிவுப் பிரசாரம் செய்வதை அரசாங்கம் தடை செய்யாமல் இருக்குமேயானால், இந்த நாட்டை எவ்வளவோ முன்னுக்குக் கொண்டுவரமுடியும். இந்த இந்தியத் துணைக்கண்டத்தின் வடக்கே அரசாட்சி செய்து வந்த அரசர்கள் எல்லோரும், யாகம் செய்து போருக்குச் சென்றார்கள் என்று இருக்கும் தவிர, தமிழ் நாட்டை ஆண்டுவந்த அரசர்கள் அப்படி செய்ததாகக் கதை இருக்காது. இந்த உலகத்திலே செய்கின்ற தானதர்மம் மறு உலகத்திற்குப் போவதற்கு அல்ல என்பதைத் தமிழன் தன் இலக்கியத்திலே பொறித்திருக்கிறான். இந்த நாட்டிலே உள்ள மக்கள் திருவண்ணாமலை இலட்ச தீபத்திற்குப் பணம் கொடுப்பார்கள், வாசகசாலைக்குப் பணம் கொடுக்க மாட்டார்கள். ஏன்? இரண்டு உலகத்தை நம்புவதால், அந்த லோகம் இருக்குமானால், புராணப்படி, மதத்தின்படி, யார் அங்குப் போயிருக்கிறார்கள். தேவலோகத்தில் என்ன இருக்கிறது! காமதேனு கற்பகம், மேனகை, ஊர்வசி, நந்தி இருக்கும். இங்கே இச்சையை அடக்கி அங்கே சுகம் பெற நினைக்கிறார் இங்கே இருக்கும் இயற்கையைப் பார் உன் மனைவியைப்பார் கல்விச்சாலையைப்பார். மற்றும் பலப்பல தேவந்திரன் எவ்வளவோ கஷ்டப்பட்டு தவம் செய்து தேவர் பதவி பெற்று அங்கே சுகம் கிடைக்காமல், பூலோகத்தில் இருக்கும் முனிபுங்கவரின் மனைவி அகலியைத் திருட்டுத்தனமாகக் காதலிக்க வருகிறான். அதனால்தான் வைதிகர்களுடைய பக்தியின் மேல் எங்களுக்குச் சந்தேகம் வருகிறது.

### நல்ல கருத்தை நாட்டில் பரப்புங்கள்

மேல் நாட்டார் தங்கள் வாழ்க்கைத்தரம் உயர என்னென்னவோ கண்டுபிடித்திருக்கிறார்கள். ஒரு காதறுந்த ஊசி செய்ய கற்றுக்கொண்டார்களா? நேரு அமெரிக்கா செல்லும்போது மைசூர் சந்தனக் கட்டையில் செய்த பேழையை வாங்கிச் சென்றிருக்கிறார். அமெரிக்கர்கள் என்ன நினைப்பார்கள். கோதுமை கடன் கேட்க வந்த நேரு என்று தானே சொல்லுவார்கள். அரிக்கன் லைட் கூட செய்யத் தெரியாத நாட்டில் இருந்து வந்தவர் என்று கேலி பேசத்தானே செய்வார். நாங்கள் நாஸ்திகர்கள்; எங்களுடைய மூதாதைகள் தான் என்ன கண்டுபிடித்தார்கள்? மேல நாடுகளிலே அரிக்கன், மின்சாரம், மெர்க்குறி, ஒலிபெருக்கி, பஸ், ரயில், கப்பல், விமானம், முதலியவைகளைக் கண்டுபிடித்து இருக்கிறார்கள். முதன் முதலிலே இவைகளைக் கண்டுபிடிக்க எண்ணி, எண்ணத்தை வெளியிட்டவனைப் பைத்தியக்காரன் என்பதைத் தவிர வேறு என்ன நினைத்திருப்பார்கள். 100 தீவட்டித் தரக்கூடிய வெளிச்சத்தை ஒரு பல்ப் தருகிறது 1 தீவட்டிக்கு 4 ஆட்கள் தேவை, 100-க்கு 400 பேர் தேவை. அதுவும் கடவுள் அருளால் அணைந்தாலும் அணைந்துவிடும். விஞ்ஞானம் இருப்பதால்தான் தீவட்டி பிடிக்க ஆட்கள் வேண்டிய நிலை போய் கம்பத்திலே விளக்கைத் தொங்கவிட்டுவிட்டுக் கூட்டம் நடத்துகிறோம் ரயிலைக் கண்டுபிடித்தவன் யார் என்று தெரிந்துகொண்டார்களா? ஏறிச் செலவது ரயில்; அதைப் பயன்படுத்திக்கொண்டு ரயில் ஜன்னலின் வழியே கோபுர தர்சனம் செய்கிறார்கள். அதேபோன்று கடலிலே மிதக்கவேண்டுமென்று ஒருவன் முயற்சி செய்து இருப்பான், ஆனால் அவனை நாஸ்திகன் என்று தூற்றி இருப்பார்கள், அதன் விளைவு என்ன? இன்று கடலுக்கு அடியிலே சப்மரினில் போகிறான். ஆகவே இந்தச் செட்டிநாட்டுத் தமிழ் மன்றத்தார் நல்ல கருத்துள்ளவைகளைப் படித்து நாட்டு மக்களிடையே பரப்ப வேண்டும். ஆகவே நான் முன் சொல்லியபடி அரசாங்கம் அறிவுப் பிரசாரத்தை 10-வருடம் தடை செய்யாமல் இருந்தால், உலகம் மெச்சக்கூடிய அளவுக்கு வளரமுடியும்" என்று பேசி முடித்தார்.

---

## ரயில்வே எஞ்சின் உற்பத்திச்சாலை

## இங்கல்ல; கல்கத்தாவில்!

கல்கத்தாவுக்கருகில் எஞ்சின் உற்பத்தித் தொழிற்சாலையொன்றினை 14 கோடி ரூபாய் செலவில் நிறுவுவதென்ற இந்திய சர்க்காரின் திட்டத்தின் கீழ் தொழில் நுணுக்க முறை உதவிகளையும் சாதனங்களையும் பெற்றுவர இந்திய சர்க்காரால் லண்டனுக்கு அனுப்பப்பட்டிருந்த இந்திய ரயில்வேக்கள் எஞ்சின் இலாகா பொது நிர்வாகி தோழர் எ. என். முக்கர்ஜி கடந்த வெள்ளியன்று பம்பாய்த் திரும்பினார். அவர் டில்லி சென்றதும் தனது சுற்றுப் பயண விவரங்களையும், தகவல்களையும் இந்திய சர்க்காரின் ரயில்வே இலாகா முன் வைப்பாராம்.

---


## ஆம்பூர் வாசகர்களுக்கு

நமது 'மாலைமணி' ஆம்பூரில் கீழ்கண்ட இடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

நியூ நேஷனல் பீடா கடை
நேரு பஜார், ஆம்பூர்.
மானேஜர் "மாலை மணி"


---

## மறுமலர்ச்சி நூல் நிலையம்

சென்னை, அக். 4—

சென்னை மலையபெருமாள் தெருவிலுள்ள பெரியார் நூல் நிலையம் 2—11—49ல் "மறுமலர்ச்சி நூல் நிலையம்" என மாற்றப்பட்டது. இந்நூல் நிலையம் திராவிட முன்னேற்றக் கழகத்துடன் இணைந்து பணிபுரியும். நூல்நிலைய செயற்குழுவினர்:—

செயலாளர்:— க. சோ. திருநாவுக்கரசு; பொருள் உறுப்பினர்:— நா. சுப்பிரமணியன்; விளம்பர உறுப்பினர்:- ஈ. பூ. குத்திசேரடி; மற்றும், ச. சரஸ்வதி, பே. ச. ஜம்புலிங்கம் ஆகியோர் ஆவர். (வி-உ)

---

## தோழர் அருணாசலம் மறைவு

சென்னை மாகாணத்தைச் சேர்ந்த பிரபல பாக்சர் தோழர் எஸ். எ. அருணாசலம் அவர்கள் திடீரென மரணமடைந்ததைக் குறித்து சென்னை செயின்ட் சேவியர் உடற்பயிற்சிக் கழகத்தார் தோழர் எஸ். எம். சாமி அவர்கள் தலைமையில் கூடி ஓர் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றினர். அத்துடன் மறைந்த தோழர் அருணாசலம் அவர்களுக்கு மரியாதை செலுத்த பொது விடுமுறை விட வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்வதாகவும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# குருநானக்கும் குமாரசாமியாரும்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கொண்ட சுரண்டல் இயந்திரமாகும். பிறர் உழைப்பை உறிஞ்சி, உல்லாசமாக, உலக சுகபோகத்தை அனுபவித்துக் கொண்டு, மனித சமுகத்தின் சிரசில் வீற்றிருக்க ஜீவ காருண்யமற்ற சிறு கூட்டம் ஒன்று, வீரத்தைக் கட்டிக் காக்கக் கூட்டமொன்று, வாணிபம் செய்யும் கூட்டமொன்று, இந்த மேல் மூன்று கும்பல்களிடை இன்றியமையாத் தேவைகளையும் தமது உழைப்பால் உருவாக்கித் தர உழைப்பவர் கூட்டமொன்று இந்த 'அருமை'யான ஏற்பாடு அழிந்துபடாமல் இருக்க, அந்தக்காலத்தில் உச்சியிலே இருந்த 'உயர் குலத்தோர்' ஏற்படுத்திவிட்டதுதான் இந்தப் பொருளாதார சுரண்டல் சூழ்ச்சி இயந்திரம். இதற்கு பெயர்தான சனாதனம்—வருணாசிரமம்—இந்து தர்மம்—வேதத்தின் சாரம்!

குருநானக், இந்தச் சனாதன தர்மத்தைக் கண்டு கண்ணீர் சிந்தினவர்—சாடினவர்—தாம் ஒரு உயர்ஜாதிக் குடும்பத்தில் பிறந்தவராக இருந்திருந்தும்கூட. மனித வாழ்க்கைக்குப் புதுப் பாதை ஒன்று கண்டார், சீக்கிய சமுதாயத்தைத் தோற்றுவித்தார். குருநானக்வாள் எடுத்துப் போராடினார், படையெடுத்து வந்தவர் புகுத்திய விபரீத வாழ்வை வேரோடு களைந்தெறிய. அவருக்குக் கோயில் அமைக்க, தியாகராயநகரில், கல்நாட்டு விழா ஆற்றிய நமது முதல் அமைச்சர், அந்த நேரத்தில், குருநானக்கின் பாதையிலே பரவசங்கொண்டு சில பல கூறியுள்ளார். மனம் நொந்து அதிலே முக்கியமானது, நாம கருதத்தக்கது நமது சமுதாயத்திற்குக் களங்கமாக இருந்து வரும் ஜாதிப் பாகுபாட்டை, அக்கிரமமான சமுதாய அநீதி என்று குருநானக் கூறினதைக் கனம் குமாரசாமியார் எடுத்துக்காட்டிப் பேசி இருப்பது. மகிழ்கிறோம்—வரவேற்கிறோம்—வெற்றி பெற விழைகிறோம். அதற்கு நமது ஒத்துழைப்பு என்றும் ஆளவந்தார்களுக்கு உண்டு என்றும் உறுதி கூறுகிறோம்.

நாம் ஜாதி முறையைக் கண்டிப்பது கண்டு, நாம் மக்கள் நலனை மறந்து, ஜாதித் துவேஷத்தை மூட்டுகிறோம் என்று நம் மீது குற்றம் சுமத்தி, அடக்குமுறைகளை அவிழ்த்து விட்டு, நமது எழுத்தையும் பேச்சையும் தடுத்து வரும் சனங்களின் தலைவர், ஜாதி ஒழிப்புக்குச் சல்லடம் கட்டுவதுகண்டு நாம மகிழாமல் எப்படி இருக்கமுடியும். அன்று குருநானக் ஆற்றிய பணியை, நாம் இன்று புரிந்து வருகிறோம். அதாவது ஜாதி ஆணவத்தின் ஆரம்பப் பீடமான சனாதனத்தைத் தகர்க்கப் போரிடுகிறோம் வெளிப்படையாக, அமைதிக்குக் கேடு சூழ்ந்துவிடாத நிலையில். குருநாதர் போற்றப் படுகிறார் இங்குக் கனங்களால்! அதே நேரத்தில், அதே பணிபுரியும் நாம், தூற்றப்படுகிறோம், அதே கனங்களால். முரண்பாடு இருக்கிறது, இவர்களின் செயலில் என்பர் சாதாரண அறிவுடையோரும்!

குருநானக், இன்று உயிரோடு எழுந்துவந்தால், அவர் மீது, அடக்குமுறை பாணங்களைப் பொழிந்தாலும் பொழிவர், இன்று அவரைக்கோயில் கட்டி கடைக்கால் போடும் அமைச்சர்கள் ஆச்சரியம் இல்லை இதில்! அதே நேரத்தில் மற்றோர் இடத்தில், சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்றுள்ள சந்திரசேகர அய்யர் ஒரு பத்திரிகையின் விழாவிலே, திருவாய் மலர்ந்தருளி இருக்கிறார் இந்து தர்மத்தை—இந்து கலாசாரத்தைப் பிரசாரம் செய்வது மதம் கலவாத அரசு என்பதற்குப் பொருத்தமானதுதான் என்று.

முன்னாள் நீதிபதி கூறுகிறார், இந்துகர்மத்தை—சனாதன தர்மத்தை உயிர்ப்பியுங்கள் என்று! முதலமைச்சர் கூறுகிறார், குருநானக் போல் சனாதனதர்மத்தை அழியுங்கள் என்று! முதல் கூறப்பட்ட 'தர்மம்' மக்களைச் சீரழியச் செய்தது—இன்றும் செய்து கொண்டு இருப்பது! பின்னையது, மக்களை உயர்த்துவது—மக்கள் அனைவரும் சமம் என்று போதனை புரிவது! அய்யர் கூறுவது ஜனநாயகப் பண்பாட்டுக்குக் கல்லறைத் தோண்டுவது! குருநானக்—குமாரசாமியார் கூறுவது மக்களாட்சி முறைக்கு ஆக்கமளிப்பது! நாடு கேடுற்றால், அய்யர் எடுத்துக்காட்டும் அகர்மத்தால்! கனம் குமாரசாமியார் கண்டித்துத் திருத்துவாரா நாட்டை? இது நாம கேட்பது அன்று குருநானக்கின் சமாதியிலிருந்து கிளம்பும் கருத்துரையின் வினா அது. பதில் இருக்காது!

## ஏஜண்டு தேவை

கோவை மாவட்டம் சூலூரில் "மாலை மணி" விற்பனை செய்ய முன் பணம் கட்டக் கூடிய ஏஜண்டு தேவை.

மானேஜர், "மாலை மணி"

## திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டம்

10–11–49

வடுகப்பட்டி:— ஏ. வி. பி. ஆசைத்தம்பி.

# தி. மு. கழகப் பொதுக்கூட்டங்கள்

## இராமநாதபுரம் (கோவை)

கோவை, நவ. 3—

2—11—49 மாலை 4 மணிக்கு பங்கஜா மில்லுக்கு எதிர் மைதானத்தில் கழகப் பொதுக்கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. அதபோது தோழர் வேலூர் கே. சுப்பிரமணியம் அவர்களைக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி சிறப்புடன் நடத்திக் கொடுக்கும்படியாய் அழைக்கப்பட்டிருந்தார். அதன் பொருட்டு கோவை, வந்திருந்த தோழர் வேலு சுப்பிரமணியத்தின் மீது எதிர்பாராத விபத்து ஒன்று ஏற்பட்டது. வாடகைக் கார் (டாக்ஸி) அவர் மீது மோதியதின் விளைவாக அவருடைய கால்களுக்குப் பலத்த காயம் சேர்ந்தது என்றாலும், அவருடைய கால்களின் உபத்திரத்தையும் பாராமல், வெகு அழகாக சொற்பொழிவாற்றி தலைமைதாங்கிக், கூட்டத்தை நடத்திக்கொடுத்தார். (வி-உ)

## புதுக்கோட்டை

புதுக்கோட்டை, நவ 4—

திராவிட முன்னேற்றக்கழகப் புதுக்கோட்டை நகரக்கிளையின் சார்பில் பொதுக்கூட்டம் 3—11—49 மாலை 6-30 மணிக்குத் திலகர் மைதானத்தில் தோழர் முருகு சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் தொடங்கியது தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர் டி.கே. சீனிவாசன் பேசும்போது, முன்னேற்றக் கழகத்திற்கு நாடு காட்டும் ஆதரவு பற்றியும், அமெரிக்காவில் நேரு சுற்றுப்பிரயாணம், தமிழ்நாட்டுக் கோவில்கட்டுப் பவநகர் மஹாராஜா சுற்றுப்பிரயாணம், முன்னேற்றக் கழகப் பிரசாரகர்கள் தொடக்கவிழாச் சொற்பொழிவாற்றச் சுற்றுப்பிரயாணம் — இம்மூன்றும் ஒரே சமயத்தில நடந்தன என்றும், நேரு உலகைப்பார்த்தார்; கவர்னர் ஜெனரல் ஆண்டவனை பார்த்தார், முன்னேற்றக் கழகத்தார் மக்களைப்பார்த்தனர் என்றும் குறிப்பிட்டுச் சுமார் ஒரு மணிநேரம் பேசினார்.

அடுத்துத் தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் பெரியார் திருமணம் விளைத்த குழப்பம் பற்றியும், அக்குழப்பத்தினின்று மீண்ட விதம் பற்றியும், முன்னேற்றக் கழகத்தினை அடக்குமுறையால் நசுக்க எண்ணுவது பேதமை என்பதும், நாடகம் நடத்துவதை, பேசுவதை, எழுதுவதைச் சட்டங்களின் மூலம் தடுத்துவிட முடியாதென்றும், தோழர் காமராஜர் தான்தோன்றித் தனமாய் குறித்து எச்சரிக்கை செய்தும், காங்கிரஸ் அரசாங்கம் எந்த வகையிலும் மக்களுக்குத் திருப்தியளிக்கும் வகையில் நடந்துகொள்ளவில்லை யென்றும், அவர்களுடைய எந்தத் திட்டங்களும் வெற்றிபெறவில்லை யென்றும், மிக விளக்கமாக நகைச்சுவை ததும்பும் வகையில் சுமார் 1-30 மணி நேரம் பேசினார். தலைவர் முடிவுரைக்குப் பிறகு கூட்டம் இரவு 9 மணிக்கு இனிது முடிந்தது.

## எக்கலாஸ்புரம்

எக்கலாஸ்புரம், (வ. ஆ) நவ 4-

30-10-49 ஞாயிறு இரவு 8-30 மணிக்கு இவ்வூர் தி மு. கழக துவக்க விழா நடைபெற்றது. துவக்கவிழாவிற்கு வடக்கப்பட்டு வி. என். தத்தப்பன் தலைமைபேற்று திராவிட முன்னேற்றக்கழகம் பாட்டாளிகளுக்குப் பாதைவகுக்கும் கழகமென்றும் இன்னும் நாட்டின் நிலைமையைப்பற்றியும் விளக்கினர்

தோழர்கள் திருப்பத்தூர் நெடுஞ்சேழியன், வாணியம்பாடி பரமசிவம், வாணியம்பாடி ராசரத்தனம், எக்கலாஸ்புரம் ஈ.எல். வேணு, வி. என். ஜானகிராமன் இவர்கள் நன்கு சொற்பொழிவாற்றினர்கள். திரளான மக்கள் கூடியிருந்தனர்.

தி மு. க. கொடியை ராசரத்னம் ஏற்றிவைத்தார். துவக்க விழா மேடை மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டன. அறிஞர் அண்ணா படத்தை ஈ. எல். வேணுகோபால் திறந்து வைத்தார். கூட்டம் இனிது 10-30 மணிக்கு முடிவுற்றது.

3-11-49 இரவு 8-மணிக்கு இவ்வூர் தி. மு. கழகச் சார்பில் திருப்பத்தூர் தோழர் வழக்கறிஞர் தோழர் ஜி. சாமிநாயடு B.A.B.L. அவர்கள் தலைமையில் நாடு —வாழும், திராவிட முன்னேற்றக் கழகம் ஏன்? என்பதைப்பற்றி, தோழர் வி என். தத்தப்பன், தோழர் ஈ என். வேணுகோபாலன் இவர்கள் நன்றாக விளக்கிப் பேசினார்கள். பின்னர் தலைவர் ஜி. சாமிநாயுடு அவர்கள் எளியநடையில் கிராமமக்களுக்கு நகைச்சுவையுடன் தற்கால அரசியலார் செய்யும் அநீதியைப்பற்றிப் பேசினார்கள். கூட்டம் ஈ.எல. வேணுகோபாலன் நன்றி கூற, இரவு 10-30 க்கு இனிது முடிந்தது. கூட்டத்தில் ஏராளமான ஆண் பெண், குழந்தை, விவசாயத் தொழிலாளிகள் இருந்தார்கள் (வி-உ)

## வடக்கப்பட்டு

வடக்கப்பட்டு, (வ.ஆ.) நவ. 4—

30—10—49 இவ்வூர் தி. மு. கழகத் துவக்க விழா நடைபெற்றது, இரவு 7 மணிக்கு.

அவ்வமயம் துவக்கவிழாவில் பெருந்திரள்கொண்ட ஆண்களும், பெண்களும், மாணவர்களும் ஆகக் குழுமியிருந்தனர். தோழர் வி. என. வடிவேலு அவர்களால் திராவிடநாட்டு கொடியேற்றப்பட்டது. தோழர் திருப்பத்தூர் நெடுஞ்சேழியன் அவர்கள் திராவிட முன்னேற்ற கழகத்தின் அவசியத்தை விளக்கிகூறி, மக்களை வரவேற்று, தோழர் வி. என். தத்தப்பன், அவர்களைத் தலைமை வகிக்கும்படிகேட்டுக்கொண்டார். தத்தப்பன் அவர்கள் முன்னுரையாகப் பெரியாரின் பொருந்தாத் திருமணத்தைப் பற்றி வேதனைபடைந்து உழைப்பாளிகள் உன்னதநிலைபெற பாதை தி. மு. கழகந்தான் என்பதை நன்றாக விளக்கினர்.

தோழர் வாணியம்பாடி டி ராசரத்னம் சமுதாயச் சீர்திருத்தத்தைப் பற்றியும் நெடுஞ்சேழன் திராவிட பிரிவினை அவசியத்தை பற்றியும், நன்றாக விளக்கிப்பேசி அவர்கள் அண்ணாத்துரை படத்தைத் திறந்து வைத்தார். தி. மு. க. கொடியை ராசரத்னம் ஏற்றிவைத்தார். தோழர் மூன்லைட் வடிவேலு அவர்கள் அன்று உடல் நலம் சரி இல்லாததால் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. தோழர் வாணியம்பாடி பரமசிவம் வடநாட்டார் சுரண்டலைப் பற்றிப்பேசினார். (வி-உ)

## தர்மபுரி

தர்மபுரி, நவ. 2—

1—11—49-ந் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு தர்மபுரி திராவிட முன்னேற்றக் கழகத் துவக்கவிழா நடைபெற்றது. தோழர் வி. எஸ். நடேசனார், த. ஆடியபாதம் திராவிடஇசைப் பாடல்களும், திராவிடப் பண்பாடும் பாடிய பிறகு தோழர் நடேசனார் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகிக்க தோழர் ராசலிங்கம் அவர்களை பிரேரேபிக்க தோழர் குட்டியப்பன் ஆமோதித்த பிறகு தோழர் ராசலிங்கம் தலைமைவகித்தார்.

சேலம் தோழர் அ. சித்தையன் அவர்கள் தனது காலில் எலும்பு முறிந்திருந்தும் அதை பொருட்படுத்தாமல் துவக்க விழாவைச் சிறப்புற நடத்திக் கொடுத்தார்.

அவர் பெரியாரின் பொருந்தாத் திருமணம், கழகத்தில் சேர்ந்து உழைத்த உத்தமர்களுக்குப் பெரியார் தந்த பரிசு, கைத்தறி நெசவுத் தொழிலாளர்களின் துயரம், குடும்பம் குடும்பமாக பிச்சை எடுக்க வேண்டிய அவர்களது நிலை, இதே நேரத்தில் அமெரிக்காவில் நேரு பவனி, ஆட்சியாளரின் ஆணவம், காங்கிரசுக்கு ஆதரவு தேட ரதம், கஜ துரக பதாதிகளுடன் மந்திரிகள் சுற்றுப் பிரயாணம், மதச்சார்பற்ற சர்க்கார் எனக் கூறிக்கொண்டு சோமநாதபுரக் கோபுரத்தைக் கட்டுவது, தேவையில்லாத, பண்டிகைக்கு விடுமுறையளிப்பது, கழக கூட்டங்களுக்கு 144, நாடகத்திற்குத் தடை, புத்தகம் பறிமுதல், அச்சிட்ட பதிப்பகத்திற்கு ஜாமீன், அரசாங்கம் அண்ணாவை திருச்சி மாஜிஸ்ட்ரேட் முன் கொண்டுவந்து அழைத்தது, கழகத்தின் எதிர்காலத்திட்டம் முதலியவைகளைப் பற்றி விளக்கமாகப் பேசினார். பிறகு தோழர் வி. எஸ். நடேசனார் அவர்கள் பேசும்பொழுது தடை செய்ய வேண்டியது கழகப் புத்தகமா. புராண புத்தகமா என்பதையும், மதச்சார்பற்ற சர்க்கார் எனக் கூறிக்கொண்டு சங்கராச்சாரிக்கு ரமணர் கட்டும் ஆதரவு தரும் கடவுள்கள் தோன்றிய வரலாறு முதலியவைகளைப் பற்றி பேசிய பிறகு செயலாளர் நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது. (செ-ர)

## சந்தாதாரர்களுக்கு

தாங்கள் எழுதும் கடிதங்களிலும், அனுப்பும் மணியார்டர்களிலும் தங்கள் சந்தா எண்ணைக் குறித்து எழுதும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். சந்தா எண் குறிக்காமல் எழுதினால் கண்டிப்பாய் கவனிக்கப்படமாட்டாது, என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மானேஜர், "மாலைமணி"

# திராவிட முன்னேற்றக் கழகங்கள்

### கோமாலிங்கம்—சிற்றூர்க்கிளை

கோமாலிங்கம், அக். 31—

இவ்வூர் திராவிடர் கழகக் கூட்டம் தோழர் அ. நாகப்பன் அவர்கள் தலைமையில், 30—10—49ல் கூடியது. அதுபோது, இவ்வூர் தி. கழகம், "திராவிட முன்னேற்றக் கழகம்—கோமாலிங்கம் சிற்றூர்க்கிளை" என மாற்றியமைக்கப்பட்டு, புதிய செயற்குழுவொன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:- வே. நாச்சிமுத்து; பொருள் உறுப்பினர்:- அ. நாகப்பன்; விளம்பர உறுப்பினர்:- வே. வீரப்பன். பின்பு தோழர் ப. மாரியப்பன் நன்றி கூறக் கூட்டம் முடிவுற்றது. (வி-உ)

* * *

### பெங்களூர்—நகரக்கிளை

பெங்களூர், அக். 31—

பெங்களூர் சிடி தி. மு. க. அமைப்புக் கூட்டம் 30—10—49ல் தோழர் எஸ். திருமுடி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர் எஸ். எ. தியாகராசன் திராவிட நாட்டுப் பண்பாடினார். பிறகு தோழர்கள் வி. இளஞ்சேரன், வே. ஆ. தாமோதரன், அ. க. சிவ்வரன் ஆகியோர் தி. மு. கழகம் அமைக்கவேண்டிய இன்றியமையாமை குறித்துப் பேசினர். பின்பு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, "திராவிட முன்னேற்றக் கழகம்—பெங்களூர் நகரக்கிளை" திறவப்பட்டு, கீழ்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:- அ. க. ஈசுவரன்; துணைச்செயலாளர்:- கோ. க. ஆறுமுகம்; பொருள் உறுப்பினர்:— கி. ஊ. அப்துல்ஹமீத்; விளம்பர உறுப்பினர்:- ஆ. கு. சாமி. ஏனைய செயற்குழுவினர்:— எஸ். பி. தியாகராசன், எஸ். திருமுடி, சி. ஓ. பெருந்தகையர், சி. ஓ. சந்திரன், டி. ஆர். சுந்தரம், பொன்னுசாமி. (வி-உ)

* * *

### கோலார், தங்கவயல்-நகரக் கிளை

கோலார், நவ. 1—

கோலார் தங்கவயல் திராவிடர் கழகச் செயற்குழுக் கூட்டம், 30-10-49-ல் தோழர் இ. சுந்தரராசனார் தலைமையில் நடைபெற்றது. அதுபோது (கோலார்) தங்கவயல் திராவிடர் கழகம், "திராவிட முன்னேற்றக் கழகம்— கோலார் 'தங்கவயல் நகரக் கிளை' என மாற்றியமைக்கப்பட்டு தற்காலிகச் செயற்குழு வொன்று அமைக்கப்பட்டது பின் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

செயலாளர்:—கே. இராகுலன்; துணை செயலாளர்:—ஆறுமுகம்; பொருள் உறுப்பினர்:— கே. ஜி முனுசாமி. (செ-ர்)

* * *

### ஜமீன், ஆலமரத்துப்பட்டி—சிற்றூர்க்கிளை

ஜ. ஆலமரத்துப்பட்டி, நவ. 1—

இவ்வூர் தி. மு. க. அமைப்புக் கூட்டம் 1-11-49ல் கூடியது. அதுபோது, "திராவிட முன்னேற்றக் கழகம்—ஜமீன் ஆலமரத்துப்பட்டி சிற்றூர்க்கிளை" திறவப்பட்டு, புதிய செயற்குழுவொன்று அமைக்கப்பட்டது.

செயலாளர்:— எ. சின்னசாமி; துணைச்செயலாளர்:—எம் கோவிந்தசாமி; பொருள் உறுப்பினர்:—என். வி. அப்பாவு; விளம்பர உறுப்பினர்:—கே. ஆர். ரங்கசாமி, ஏனைய செயற்குழுவினர்:—என். எம். கதிரேசன், எஸ். நல்லப்பன் ஆர். பழனிசாமி, ஆர். ரங்கசாமி, வி. சிலையப்பன், கே. என். நல்லப்பன். (செ-ர்)

### நீடாமங்கலம்—நகரக்கிளை

நீடாமங்கலம், அக். 31—

திராவிட இயக்க ஆதரவாளர்களின் கூட்டமொன்று, 30-10-49ல் தோழர் என். ஜி. சந்திரசேகரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, "திராவிட முன்னேற்றக் கழகம்— நீடாமங்கலம் நகரக்கிளை" திறவப்பட்டது. பிறகு தோழர் வி. விஸ்வநாதன் அவர்களைச் செயலாளராகக் கொண்ட செயற்குழுவொன்று தேர்ந்தெடுக்கப்பட்டது. பின்பு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, கூட்டத்தினருக்கு சிற்றுண்டி வழங்கப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது. (வி-உ)

* * *

### சென்னை, சேத்துப்பட்டு—நகர உட்கிளை

சென்னை, அக். 31—

சென்னை, சேத்துப்பட்டு திராவிடர் கழகச் செயற்குழுக் கூட்டம் துணைத் தலைவர் தோழர் தே. ம. ஏகாம்பரம் அவர்கள் தலைமையில் 30-10-49 ல் நடைபெற்றது. அதுபோது சேத்துப்பட்டு, ஜெகநாதபுரம் திராவிடர் கழகம், "திராவிட முன்னேற்றக் கழகம்—சென்னை நகர சேத்துப்பட்டு உட்கிளை" என மாற்றப்பட்டது. புதிய செயற்குழுவொன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—ரா. முனுசாமி; துணைச் செயலாளர்:—ஆ. சுப்பிரமணி; நிதி உறுப்பினர்:—தெ. ம. ஏகாம்பரம்; விளம்பர உறுப்பினர்:- மு. கணேசன். ஏனைய செயலுறுப்பினர்கள்:—ம. பூ. சிவஞானம் வெ. ஏகாம்பரம், சா. அ. தாஸ் பின்பு நன்றி கூறலுடன் கூட்டம் முடிந்தது. (செ—ர்)

* * *

### மணமேடு—சிற்றூர்க்கிளை

மணமேடு, அக். 31—

இவ்வூர் திராவிடர் கழகக் கூட்டம் 30—10—49ல் தோழர் எஸ். ஆர். நடராசன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, மணமேடு திராவிடர் கழகம், "திராவிட முன்னேற்றக் கழகம்—மணமேடு சிற்றூர்க்கிளை" என மாற்றியமைக்கப்பட்டு. புதிய செயற்குழு வொன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்,— எம். வி. பெருமாள்; துணைச் செயலாளர்:- எம். பி. தங்கராசு; பொருள் உறுப்பினர்:- எம். ஆர். பிச்சை.

ஏனைய செயற்குழுவினர்:—எஸ் ஆர். நடராசன், எஸ். குமாரசாமி, எம். வி. பெருமாள், எம். பி. தங்கராசு, எம். ஆர். பிச்சை. (செ-ர்)

* * *

### பேரையூர்—சிற்றூர்க்கிளை

பேரையூர், அக். 31—

திருமங்கலம் தாலுக்கா, பேரையூர் தி. மு. க. அமைப்புக் கூட்டம், தோழர் கா. அய்யணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபொழுது, "திராவிடமுன்னேற்ற கழகம—பேரையூர் சிற்றூர்க்கிளை" திறவப்பட்டுக், கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:- எம். எ. சண்முகவேல்; துணைசெயலாளர்:- தி. க. திலகசிதம்பரம்; நிதி உறுப்பினர்:- வீ. வேலாயுதம்; விளம்பர உறுப்பினர்:— க. சு. அதிபதி.

ஏனைய செயலுறுப்பினர்கள்:— கா. அய்யணன், ஏ. எஸ். எ. குணசேகரன், என். மகாலிங்கம், ஆர் எஸ். காளிதாசன், ஆ காமாட்சி பிள்ளை தோழர்கள் பெ சேனிமுத்து, எம். எ. சண்முகவேல், இருளப்பன், நிலை ஆகியோர் தி. மு. கழகம் பற்றிப் பேசினர். (செ-ர்)

## சென்னை அரசினர் கல்லூரி

### தமிழ்க் கழகம்

சென்னை மவுண்ட்ரோடிலுள்ள அரசினர் கலைக் கல்லூரித் தமிழ்க் கழகத்தின் சார்பாக சிறப்புக் கூட்டம் ஒன்று 9—11—49 புதன்கிழமை மாலை 3 மணிக்கு, கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். அதுபோது மாகாண அரசினர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் தோழர் K. S. மகாதேவன் எம். ஏ., அவர்கள் தலைமையில், தோழர் இரா. நெடுஞ்செழியன் எம் ஏ, அவர்கள் "புத்தியதோர் உலகம் செய்வோம்" என்ற பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றுவார்கள்

## இனி நடப்பவை

வடுகப்பட்டி— பெரியகுளம் தாலுகா, வடுகப்பட்டி தி. மு. கழகக் கிளையின் துவக்க விழா 10-11 49-ல் நடைபெறும். அதுபோது, தோழர்கள் எ. வி. பி ஆசைத்தம்பி, பெரியகுளம் வேதிலைராசன், கல்லுப்பட்டி ப. கு. இராமசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

கடலூர்— தோழர் தியாகராசன்—தோழியர் கனகவல்லி திருமணம் 11-11-49 வெள்ளி காலை 9-மணிக்கு நடைபெறும். அதுபோது புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தலைமையில் தோழர்கள் சேலம் ஏ. சித்தையன், திருக்குறள் முனுசாமி பி ஏ.பி.எல்; இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். இடம்:—கடலூர் ஓ. டி. சாரங்கு வீதி, இராமலிங்க அடிகள் சபா.

* * *

தேனி— மதுரை மாவட்டம் தேனி தி. மு. க. கிளையின் சார்பாக, செல்வம் திடலில் 9-11-49 மாலை 6-மணிக்கு ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர் கே. வி. கே. சாமி, எம் எஸ். சிவசாமி ஆகியோர் பேசுவர்.

### இலவச வித்வான் வகுப்பு

சென்னை:—அங்கப்ப நாய்க்கன் தெருவிலுள்ள நவாப் அப்துல் ஹகீம் இந்து-முஸ்லிம் உயாதரக் கலாசாலையில், மாலை 6-மணிக்கு, தமிழ் வித்வான் வகுப்பு நடைபெறுகிறது. வித்வான் பிரிலிமினரி படிக்க விரும்புகிறவர்களுக்கு இலவசமாகக் கற்பிக்கப்படுகிறது. விவரம் வேண்டுவோர் நேரில் தலைமையாசிரியரைக் காண்க.

## மதச்சார்புற்ற ஆட்சியாம்!

### ஏன் இந்தப் பித்தலாட்டம்?

1950-ம் ஆண்டில் ஒவ்வொரு ஞாயிறு, நல்ல வெள்ளிக்கிழமை ஆகிய நாட்களும் பின் கண்ட நாட்களும் விடுமுறை நாட்களென சென்னை சர்க்கார் அறிவித்துள்ளனர். இது தவிர மாசந்தோறும் இறுதி சனிக்கு முந்திய சனிக்கிழமைகளும் சர்க்கார் விடுமுறை நாட்களாகும்.

திங்: ஜன 2 மீலாடி நபி.
வெள்: ஜன 13 போகிபண்டிகை
சனி: ஜன 14 பொங்கல்.
திங: ஜன 30 காந்தி மறைந்த தினம்.
புதன்: பிப் 15 மஹாசிவராத்ரி.
திங்: ஏப். 3 சந்திரகிரஹணம்
வியா: ஏப் 13 தமிழ் வருஷப் பிறப்பு.
சனி: ஜுலை 1 பாங்கிகள் அரை வருஷக் கணக்கு முடிக்கும் நாள்.
திங்கள்: ஜுலை 17 ரம்ஸான்
செவ் ஆக 15 சுதந்திரதினம்.
திங: ஆக 28 நாராயண குரு தேவரின் பிறந்ததினம் (மலபார் ஜில்லாவில் மட்டும)
திங்: செப் 4 ஸ்ரீஜயந்தி
வெள்: செப் 15 விநாயகர் சதுர்த்தி
சனி: செப் 23 பக்ரீத்
திங: அக் 2 காந்தி பிறந்ததினம்.
புத: அக 11 மஹாளய அமாவாஸ.
புத: அக் 18, வியா 19, வெள் 20. ஆயுதபூஜை.
திங்: அக 23 மொஹரம்
புதன் நவ 8, வியா 9, தீபாவளி
புத: டிஸ 20 வைகுண்ட ஏகாதசி
வெள்: டிஸ 22 மீலாடி நபி.
திங்: டிஸ 25 கிறிஸ்ட்மஸ்.

மதச்சார்பற்ற சர்க்கார் எனத் தங்களைக் கூறிக் கொள்ளத்தவறாத இன்றைய சர்க்காரின் போக்கும் செயலும் எவ்வளவு தூரம் மாறுபட்டு நிற்கின்றன வென்பதை அவர்கள் பொது விடுமுறையாக நிர்ணயித்திருக்கும் நாட்களைக்கொண்டே தெரிந்து கொள்ளலாம். அவைகளுள் பெரும் பாலன, ஏன் இரண்டொன்று போக, அத்தனையும் கடவுள்-மதம்- மூட நம்பிக்கை இன்றைய வர்ணை அவற்றின் மூலம் மௌடீகத்தைப் 'பலாத்காரமாக' மக்களிடையே நுழைக்கும் தன்மையானதுதான் என்பதை அறிவு காலத்தில் வதியும் சாதாரண மனிதனும் கூறுவானே' ஏன் இந்தப் பித்தலாட்டம் என்று கேட்கிறோம். மூடப் பழக்க வழக்கப் பண்டிகைகளை விலக்க மனமோ துணிவோ இல்லாத சர்க்கார் தங்களை மதச்சார்பற்ற சர்க்கார்' என்று மட்டும் கூறிக்கொள்ள என்ன நியாயமும் பொருத்தமும் இருக்கிறதென்று கேட்கிறோம்.

## ஆசிரியருக்கு முடங்கல்

### எம் எல்.ஏ. வின் ஆகஸ்டுத்தனம்

ஐயா,

நான் 27-10-49 வியாழன் இரவு 7-45 மணிக்கு சென்னை எழும்பூரிலிருந்து புறப்படும் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் மூன்றாம் வகுப்பில் பிரயாணம் செய்துகொண்டிருந்தேன். வண்டி செங்கற்பட்டில் நின்றவுடன் அவ்வண்டியின் காப்பாளருக்கும் (Guard) ஒரு சர்ச்சட்டைக்காரருக்கும் ஏற்பட்ட வாய்ச் சண்டை வம்பளப்பில் முடியவே, "அது என்னமோ" வென்று மக்கள் சும்மாயிருந்தனர். பிறகு வண்டி அந்நிலையத்தை விட்டு மூன்று அல்லது நான்கு கஜ தூரம் சென்றதும் நின்று விட்டது. இதற்குக் காரணம் கேட்க, ஒரு எம். எல். ஏ. வண்டியின் சங்கிலியை (Chain) இழுத்து விட்டார்" என்று ஒரு இரயில்வே அதிகாரி விடையிறுத்தினர். அந்த எம். எல். ஏ. இரண்டாவது வகுப்பின் (தூங்குமிடம்—SLEEPING BERTH) டிக்கட் வாங்கினாராம். ஆனால் அவ்வகுப்பில் தூங்குவதற்கு இடம் கிடைக்காததால், தனக்குத் தூங்க இடம் தரவேண்டுமென்றும் இல்லாவிடில் வண்டியை நகர விடமாட்டேன் என்றும அந்த எம். எல். ஏ. குளுரைத்தார்! இந்தத்தகராறு—ஒருவரின் தூங்கும் சுதந்திரம்—வண்டியிலிருந்த அத்தனை பேரும் ஏறக்குறைய 45 நிமிடங்கள் வரை காத்திருக்க நேர்ந்தது. பொறுப்புள்ளவர் என்று கூறிக்கொள்ளும் ஒருவர், நாட்டை ஆளச் சென்றிருக்கும் 'நல்லவர்', சாதாரண பாமரர் ஒருவர் செய்யும் செய்கை இதுதானா? எம். எல். ஏக்களே, இவ்வாறு அர்த்தமற்றதெற்கெல்லாம் அபாயத்தை அறிவிக்க வைத்திருக்கும் சங்கிலியை அனாவசியமாக இழுத்தல் மற்றவர்களைப் பற்றி கூறுவானேன்? இவ்வாறு வேறு யாராவது ஒருவர் வண்டியின் சங்கிலியை அனாவசியமாக இழுத்தால் அவரிடமிருந்து 50 ரூபாய் அபராதம் வசூலிக்கப் பட்டிருக்கும். ஆனால் இந்த எம். எல். ஏ. விடம் இத்தகைய சட்டப்படி எடுக்க வேண்டிய நடவடிக்கையை எடுக்காததன் காரணம என்ன? இரயில்வே நிலையத்தினர் இழுத்தவர் ஒரு எம் எல்.ஏ. என்பதனால் விட்டுவிட்டார்களா என்பது தெரியவில்லை. இவ்வாறு ஆளுக்கொரு சட்டமாக நடை முறையில் நடத்தும் இரயில்வே அதிகாரிகளும், கண்டதெற்கெல்லாம்பொறுப்பற்ற முறையில் நடந்துகொள்ளும் எம். எல். ஏக்களும் உள்ளவரை நாட்டின் நிர்வாகம் நல்ல முறையில் நடைபெறுமா? இதை இரயில்வே அதிகாரிகளும், ஆகஸ்டுக் காலத்தனத்தை மேற்கொண்ட அந்த எம். எல். ஏ. (தோழர் கோசல்ராம)வும் சிந்திக்கட்டும!

சென்னை 3 11-49 } தொண்டைமான்


8—11—49 முதல் 2-வது கடைசி வாரம்!
கே. ஆர். ராமசாமியின்,
கிருஷ்ணன் நாடகசபையாரின் நாடகம்
ஈரோடு அர்ச்சுனன் அரங்கில்
8—11—49 முதல் 1 வாரம் மட்டும்
கே. ஆர். ராமசாமி நடிக்கும்
ஓர் இரவு
புதிய கருத்துக்களடங்கிய, சமூக இலக்கியம்
தோழர் C. N. அண்ணாத்துரை M. A., எழுதியது
தினசரி இரவு 10 மணிக்கு. ஞாயிறு மாலை 6-30 க்கு.
திங்கள் விடுமுறை.
டிக்கட்:— 2-8-0, 1-8-0, 0-12-0, 0-6-0
முதல் இரண்டு வகுப்புகள் மட்டும் காலை 10-மணி முதல் மாலை 4-மணி வரை கட்டணமின்றி ரிசர்வ் செய்யப்படும்.
அடுத்த நாடகம்:— 'சிலம்பு' By, A. K. வேலன்



10—11—49 முதல் "பொன்னி" 72 பக்கங்களில் பல புதிய பகுதிகளுடன் வெளிவருகிறாள்
"பொன்னி"
மாதம் இருமுறை
உங்கள் ஊரில் 'பொன்னி' விற்பனையாளர் இல்லையா? உடனே எழுதுங்கள்.
'பொன்னி' அலுவலகம்
த. பெ. 39, புதுக்கோட்டை.


Printed & Published by T. M Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.